இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 20 பக்கங்கள்: 08 திகதி 04-11-2012 விலை: 15.00

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

# இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களை ஒருங்கிணைத்த மாபெரும் செபமாலைப் பேரணி

அன்னை மரியாளுடைய வணக்கமாதமாகிய ஒக்டோபர் இறுதி ஞாயிறு, யாழ்மறைமாவட்ட திருச்சபை வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மாபெரும் செபமாலைப் பேரணி நடைபெற்றது. இலங்யையின் பல பாகங்களில் இருந்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள், மிகவும் பக்தியான முறையில், அன்னை மரியாளின் அன்புப்பிள்ளைகள் என்ற உணர்வுடன் கைகளில் செபமாலையினை ஏந்தியவாறு





தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் செபமாலையை சொல்லிக் கொண்டும் அன்னையினுடைய பாடல்களைப் பாடிக்கொண்டும் யாழ் பட்டணத்தை சுற்றி நாங்கள் அன்னை மரியாளுடைய சேனையினர் என்பதைப் பறைசாற்றினார்கள்.

செனாருஸ் (Senatus) என்னும மரியாயின் சேனை கொழும்பு அமைப்பும், யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையின் கொமிற்சியமும் இணைந்து அன்னையின் புகழைப் பறைசாற்றும் முகமாகவும் நிரந்த சமாதானத்தை வேண்டியும் 28.10.2012 அன்று மாபெரும் செபமாலைப் பேரணியை நடத்தினார்கள். யாழ் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இந்த மாபெரும் செபமாலைப் பேரணி யாழ் மறைமாவட்ட அதிவணக்கத்திற்குரிய ஆயர் தோமஸ்சவுந்தர நாயகம் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய, குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், மரியாயின் சேனை உறுப்பினர்கள் மற்றும் பொதுநிலையினருடைய உதவியுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாபெரும் பேரணியில் திருத்தந்தையினுடைய இலங்கைக்கான பிரதிநிதி அதிவணக்கத்திற்குரிய பேராயர் ஜோசப்ஸ்பிரேரி மற்றும் இரத்தினபுரி மறைமாவட்ட அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிளிற்ரஸ் அவர்களும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலே மரியாயின் சேனை முதன்முதலாக பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய பங்கிலே ஆரம்பிக்கப்பட்டது. இதனை நினைவுகூரும் முகமாக செபமாலைப் பேரணி தொடக்கத்தில் கல்வெட்டு ஒன்று புனித அன்னாள் ஆலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் புனித அன்னாள் ஆயத்தில் இருந்து பவனியாக செபமாலையைச் சொல்லிக் கொண்டும் அன்னையின் பாடல்களை பாடிக்கொண்டும் பவனியாக நகர்ந்து, புனித யுவானியார் ஆலயம், புனித அடைக்கல அன்னை ஆலயம், புனித யாகப்பர் ஆலயம் ஊடாக யாழ். கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தை சென்

(தொடாச்சி 8ம் பக்கம்)

## கலாச்சார சீர்கேடுகளினால் இறை அச்ச உணர்வை இழந்த எம் சமூகம் இறை விசுவாசத்தில் ஆழப்பட வேண்டும்

**- விசுவாச ஆண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் யாழ் ஆயர்-**

2012 முதல் 2013 வரை அகில உலக திருச்சபை விசுவாச ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில் யாழ் ஆயர் அவர்கள் இறைமக்களுக்கான ஓர் விசேட சுற்றுமடலை இவ்வாரம் அனுப்பிவைத்துள்ளார். அவ்வறிக்கையில் கூறப்படுவதாவது:

பரிசுத்த தந்தையின் சிந்தனையில் இருந்து உருவான இவ் விசுவாச ஆண்டு பிரகடனத்தை நாமும் எம் மறைமாவட்டத்தில் பிரகடனப்படுத்தி எம் ஒவ்வொருவரினதும் இறை நம்பிக்கயை ஆழமாக விசேட கவனம் எடுக்க அழைத்து நிற்கின்றோம்.

30 வருட கொடிய யுத்தமும, அதனால் ஏற்பட்ட பாரிய விளைவுகளும் எம் மக்களை , குடியிருப்புக்களை, எம் வணக்க ஸ்தலங்களை பாதித்தது மட்டுமல்ல எம் ஒவ்வொருவரினதும் உடல், உள

(தொடாச்சி 8ம் பக்கம்)

## சிறப்புற நடைபெற்ற திருக்குடும்ப சபையின் - முப்பொன் விழா

திருக்குடும்ப சகோதரிகள் தம் ஆதித்தாய்மார் இலங்கை மண்ணில் கால்பதித்த நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவை நன்றியோடு நினைவு கூரும் முகமாக கடந்த வாரம் முப்பொன்விழாவினை கொண்டாடி மகிழ்ந்தனர்.



முப்பொன் விழாவின் ஆரம்ப நிகழ்வாக செப்ரெம்பர் 29ம் திகதி இளைஞர்களுக்கான ஒன்றுகூடல் யாழ் திருக்குடும்ப கன்னியர் தேசிய பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டது. எம் சகோதரிகள் பணியாற்றும் பாடசாலைகளிலிருந்து ஆண்களும் பெண்களுமாக முன்னூறு இளைஞர் வரையில் பயனுறப் பங்கேற்றனர். ஒக்டோபர் 17ம் திகதி திருக்குடும்ப அருங்கொடை, ஆன்மீகம், அர்ப்பணத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் அடங்கிய நாமே இருக்கிறவர் என்னும் இறுவட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் holyfamilysistersjaffna.org இணையத்தளம் ஒன்றும் மாகாணத்திற்கெனத் திறந்து வைக்கப்பட்டது.



தொடர்ந்து ஒக்டோபர் 19, 20, 21 இல் திருக்குடும்ப சபை சார்ந்த கண்காட்சியும் விற்பனையும் சபையின் ஆதித் தாய்மாரின் முதல் இல்லமாகிய யாழ் திருக் குடும்ப கன்னியர் மடத்தில் உயிர்த்துடிப்போடும், உற்சாகத்தோடும் நடைபெற்றது. சபையின் ஊற்றுக்கள், சபையின் தாய்மாரின் வருகை, மக்களோடு இறங்கி பணி புரிந்த தன்மை, வளர்ச்சி, சபையின் குழுக்களின் விபரங்கள், ஐந்து கிளைகளின் (தொடாச்சி 4ம் பக்கம்)

## வத்திக்கானின் கலை உலகிற்கு ஒருவகை உவமையாக இருக்கிறது

### - திருத்தந்தை -

வத்திக்கானின் கலைப் பாரம்பரியம் உலகிற்கு ஒருவகை உவமையாக இருக்கிறது, இதன் வழியாக, உலகின் பல்வேறு மதங்கள் மற்றும் கலாச்சார மனிதர்களிடம் திருத்தந்தையர்களால் பேச முடிகின்றது எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

கலையும் நம்பிக்கையும் - வத்திக்கானின் அழகு என்ற தலைப்பில் வத்திக்கான் அருங்காட்சியகம் பற்றிய போலந்து திரைப்படத்தை இவ்வியாழன் மாலையில் பார்த்த பின்னர் இவ்வாறு கூறினார் திருத்தந்தை. வத்திக்கான் அருங்காட்சியகத்தில் வைக்கப்படடிருக்கும் அனைத்துப் பொருட்களிலும் வெளிப்படும் கலைக்கும் நம்பிக்கைக்கும் இடையே இருக்கும் தொடர்பு குறித்து விளக்குவதற்கு எடுக்கப்பட்ட முதல் முயற்சியாக இத்திரைப்படம் இருப்பதுடன், நம்பிக்கை ஆண்டின் தொடக்கத்தில் இத்திரைப்படம் வெளிவருவது சிறப்பான மதிப்பைப் பெறுகிறது என்றும் கூறினார் திருத்தந்தை. உங்களுக்கு இறையாட்சியின் மறையுண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. மற்றவர்கள் இதனை உவமைகள் மூலம் புரிந்து கொள்வார்கள் என இயேசு தமது சீடர்களுக்கு கூறியதை இத்திரைப்படம் நினைவுகூர வைக்கிறது எனவும் கூறினார் திருத்தந்தை.

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# ஆன்மீக வாழ்விலும் டெங்கு அபாயம்

டெங்கு நோய் விழிப்புணர்வு , நுளம்பார் பேசுகிறார் போன்ற தலைப்புகள் தாங்கி துண்டுப் பிரசுரங்கள் நம்மத்தியில் பறந்து கொண்டிருக்கும் காலம் இது. சுற்றுப் புறச் சூழல் சுத்தம் தொடர்பாக கடும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. சூழல் சுத்தம் பேணாமை பாரிய குற்ற மாகக் கருதப்பட்டு சூழல் சுத்தம் பேணாதோர் நீதிமன்றில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு அபராதமும் விதிக்கப்படுகின்றது. இத்தனைக்கும் காரணம் டெங்கு நோய் ஒரு உயிர் கொல்லி நோயாக பரவி வருகின்றமையாகும். இக் கொடிய நோயிலிருந்து எம்மையும் எம் அயலவர்களையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது எமக்கு விடுக்கப்பட்ட காலத்தின் கட்டாய கடமையாகும்.

டெங்கு நோய்த் தாக்கம் எமது உடலில் ஏற்படுவது போன்று எமது ஆன்மீக வாழ்விலும் டெங்கு அபாயம் ஏற்பட்டு நிற்பதை நாம் கண்டு ணராதவர்களாக வாழந்து வருகின்றோம். டெங்கு நுளம்பு போன்று பல வகையான நுளம்புகள் எமது ஆன்மீக வாழ்வைக் குத்திக் குடைந்து எம்மைப் பாவம் நிறைந்த படுகுழிக்குள் வீழ்த்திக் கொண்டிருக்கின்றன.

டெங்கு நுளம்பின் பெருக்கத்திற்கு நீர் தேங்கி நிற்றலே பிரதான காரணம் எனக் கூறப்படுகின்றது. எமது வாழ்விலும் இன்று பல சாக்கடை கள் தேங்கி நிற்கின்றன. இதனைத் தான் ஆண்டவன் இயேசுவும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே! என அழைத்தார். பணம், பதவி, பட்டம், புகழ், ஆணவம், பேராசை, கொலை, கொள்ளை, வன்மம், ஆபாசம் என எமது வாழ்வில் பல சாக்கடைகள் ஊற்றெடுத்து எம்மையும் எம் சமூகத்தையும் குட்டிச் சுவராக்கும் பேரவலம் நிகழ்ந்து வருகின்றது.

மருத்துவவியலாளரின் கருத்துப்படி டெங்கு நுளம்பு எம்மைத் தாக்கும் போது எமது உடலி லுள்ள நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைகின்றது. குறிப்பாக எமது உடலிலுள்ள குருதிச் சிவப்பு அணுக்கள் (குருதி சிறுதட்டுகள்) எண்ணிக்கை குறைக்கப்பட்டு அவை அழிவடைவதால் உயிராபத்து சம்பவிக்கின்றது. இவ்வாறே எமது வாழ்விலும் இன்றைய காலகட்டத்தில் மனித விழுமியப் பெறுமானங்கள், கிறிஸ்தவ வாழ்வுப் பெறுமானங்கள் அழிவடைந்து செல்கின்றன. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை நாம் மறந்து பஞ்சனைப பயணம் என நினைத்து பாதாளப் பயணம் செய்து கொண்டிருக்கின்றோம். மனிதனுக்கு தோன்றுகிற வழிகளுண்டு, அவை மரண வழிகள் என்பது இறைவாக்கு.

இயற்கை சீறிக் கொண்டிருக்கிறது. பூமி ஆடும் என்கிறார்கள். சூரியன் விழும் என்கிறார்கள் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மனித செயற்பாடுகளும், ஆன்மீக வாழ்வும் ஆட்டங் கண்டால் பூமியும், ஆடத்தான் செய்யும். சோதோம் கொமோராவையும் லோத்து என்பவரையும் மனக் கண் முன் நிறுத்துவோம். வனாந்தரத்தில் குரலொலி கேட்கிறது.

ஆன்மீக வாழ்வில் எம்மை வழிப்படுத்த திருச்சபை பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. தேசிய செபமாலைப் பேரணியும் நடைபெற்று முடிந்துள்ளது. நாம் ஏதோ சாகாவரம் பெற்றவர்கள் போல மரித்த ஆத்மாக்கள் தினத் தையும் நினைவு கூர்ந்து விட்டோம். திருவருகைக் காலமும் எட்டிப் பார்க்கிறது. எல்லாம் நல்லபடி நடக்கிறது. ஆனால் எம் ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் உண்டா என்பது வினாக்குறியாகவே எம் முன் நிற்கிறது. வினாக்குற (?) நிமிர்ந்தால் ஆச்சரியக் குறியாகி (!) விடும். ஆன்மீக வாழ்வில் வினாக்குறிகளை ஆச்சரியக் குறிகளாக்கி சூழல் டெங்குடன் ஆன்மீக டெங்கையும் ஒழித்து இறைவனின் படைப்புகளுள் பேறுபெற்றவர்கள் ஆவோம்.

மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயமாகக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவிருக்கு கிடைக்கும் பயன் என்ன?" *(மத்தேயு. 16:26)*

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**
ஆசிரியர், பாதுகாவலன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

# மறை ஆசிரியர்கள் மாணவர்களை இறைவனில் பற்றுள்ளவர்களாக வாழ வழிகாட்ட வேண்டும்




யாழ் மறைமாவட்ட நான்கு மறைக் கோட்டங்கள் உட்பட மறையாசிரியர்களுக்கான எழுச்சி கடந்த வாரம் விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலியை மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஒப்புக் கொடுத்து ஆற்றிய மறையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். அவர் மறை ஆசிரியர்கள் மறை பரப்பாளர்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள் என்ற இயேசுவின் கட்டளையை ஏற்று பங்குகளில் மறைப்பணி"புரிந்துவரும் மறை ஆசிரியர்கள் திருச்சபையில் முக்கியம் வாய்ந்தவர்கள் ஆவார். உங்கள் கற்பித்தல் இதயத்திலிருந்து வர வேணடும். சமகால சீர்குலைவுகள் மாணவர்களைப் பாதிக்கின்றன. அவர்களுக்கு சரியான பாதையைக் காட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு எனவும் கூறினார். தொடர்ந்து அவர் தமது உரையில் இவ்வளவு பெருந்தொகையாக எமது மறைமாவட்டத்தில் மறை ஆசிரியர்கள் பணி புரிவது. மகிழ்ச்சி அளிக்கின்றது. இருந்தபோதும் எமது கத்தோலிக்க திருச்சபையிலிருந்து மக்கள் ஏன் பிறசபைகளுக்குப் போகிறார்கள். என்ற கேள்வியை எழுப்பி சிந்தனையைத் தூண்டினார். எமது கவனிப்பு



குறைவுதான் இதற்குக் காரணம் எனப் பதிலளித்து மக்களில் கரிசனை உள்ளவர்களாக செயற்பட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

மறை ஆசிரியர்கள் அன்னை மரியாளைப் போல சமுதாயத்தில் மறைந்த வாழ்வு வாழ்ந்தாலும் பொறுப்புள்ளவர்களாக வாழவேண்டும். இயற்கையில் நடப்பதை அமைதியுடன் இருந்து இறைவனின் செய்தியைக் கேட்கவேண்டும். மாணவர்கள் சொல்வதையும் செவிமடுக்கவேண்டும். மறையைக் கற்பிப்போர் தொடர்ந்தும் கற்கவேண்டும். கற்பதை நிறுத்தக் கூடாது. அப்போதுதான் எமது கற்பித்தல் காலத்திற்கு ஏற்றதாக அமையும் என தமது முதிர்ந்த அனுபவத்திலிருந்து அறிவுரை கூறினார்.

இடைவேளையின் பின்தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் ஒருங்கிணைந்த மறைக்கல்வி, இயேசு முதன்மை ஆசிரியர் என்ற கருப்பொருள்களில் நிரந்தர மறையாசிரியர்களான S.F.சவுந்தரம் S.அந்தோனிப் பிள்ளை ஆகியவர்களால் கருத்துரைகள் வழங்கப் பட்டன.

மதிய உணவின்பின் இயக்குநர் அருட்பணி. அன்ரன் ஜோர்ஜ் அடிகளார் தலைமையில் மாலை நிகழ்வுகள் ஆரம்பமானது இதற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்திருந்த முன்னைநாள் இயக்குநரும், யாழ்.மறைக்கோட்ட குருமுதல்வருமான அருட்பணி. R.H சகாயநாயகம் அவர்களால் கடந்த 25 ஆண்டுகள் பங்குகளில் மறைக்கல்விப் பணியில் தொடர்ச்சியாகப் பணியாற்றிய 28 மறை ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய இயக்குநர் அவர்கள் பல பங்குகளில் இருந்து சிரமங்கள் மத்தியிலும் இந்நிகழ்வுக்கு பெருமளவில் வருகை தந்துள்ள மறை ஆசிரியர்களை பாராட்டினார். பங்குகளில் மறைக் கல்வி கற்பிப்பதற்கு உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்காக கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சிலிருந்து வருடாவருடம் சிறு தொகை பணம் தரப்படுகின்றது. கற்பித்தலில் துணைக்கருவிகள் பயன்படுத்துவது மாணவர்களின் கற்றலை மகிழ்ச்சிகரமானதாக இடம்பெறச் செய்கின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். எனவே தகுந்த பாட ஆயத்தம் செய்து உங்கள் கற்பித்தல் பணியை பொறுப்புடன் செயல்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

முதல்மை விருந்தினராக வருகை தந்த அருள்பணியாளர் சகாயநாயகம் அடிகளார், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக மறைக்கல்வி கற்பிக்கும் பணியில் ஊக்கமுடன் செயல்பட்டு வந்த மறையாசியர்களை பாராட்டி வாழ்த்தியதோடு, தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபட்டு உழைக்கும் அனைத்து மறை ஆசிரியர் களும் மறையைக் கற்பிப்பதோடு உங்கள் முன்மாதிரி கையால் மாணவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக வாழவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பங்குகளில் மறைக்கல்விப் பணியாற்றும் மறை ஆசிரியர்களுக்கு புத்தூக்கம் அளிக்கும் முகமாக ஐப்பசி மாதம் 14ம் நாள் எழுச்சி நாளாக சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை ஆகிய மறைக் கோட்டங்களில் இருந்து 415 மறை ஆசிரியர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

**திருமதி. மாலினி - மானிப்பாய்.**

## புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் அவலநிலை

போரின்போது இடம்பெயர்ந்து மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்திருந்து, இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்புப் பகுதி மக்கள் பாம்புகள் மற்றும் வெடிபொருள்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள். மிகக் கடுமையாகப் போர் இடம்பெற்ற இப்பகுதிக் கிராமங்களில் அழிந்து கிடக்கின்ற வீடுகள் மற்றும் கட்டிடங்களிலும், அங்கு வளர்ந்துள்ள புதர்களிலும் பாம்புகள் நிறைந்திருக்கின்றன.

கடும் வரட்சிக்குப் பின்னர் மழை பெய்யத் தொடங்கியிருப்பதையடுத்து பாம்புகள் தொல்லை அதிகரித்துள்ளது, அதே வேளை, புல்புதர்கள் நிறைந்து காடுபோல இருக்கும் அவ்விடங்களில் கண்ணிவெடிகளும் பலதரப்பட்ட வெடிப்பொருட்களும் அகற்றப்படாமல் இருப்பதால், நிலங்களில் நடமாடுவது ஆபத்தாக இருக்கின்றது என்றும் அம்மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## திருகோணமலையில் அன்னைமரி திருவுருவம் சேதம்

இலங்கையின் திருகோணமலை பாலையூற்று பூங்கா சந்தியில் இருந்த லூர்து அன்னை திருச்சுருவம் ஒன்று அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறிகின்றன. பல ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த அன்னைமரி திருச்சுருவம் சனிக்கிழமை காலை சேதப்பட்டிருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக திருகோணமலை காவல்துறை விசாரனை நடாத்தி வருகின்றது. மூன்று தினங்களுக்கு முன்னதாக ஹஜ் பெருநாள் தினத்தன்று அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஒரு முஸ்லிம் வழிபாட்டிடம் தீ வைத்து ஏரிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# திருக்குடும்பச்சபை பொதுநிலையினர் வாழ்வும் பணியும்

**1862 இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச்சகோதரிகள் தாம் தடம் பதித்த 150ஆவது, ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூர்ந்து தம் சபைபற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் எழுதும் தொடர் கட்டுரை. - ஆசிரியர் -**

திருக்குடும்பச் சபை நிறுவுனர் பெண்கள் துறவறசபையை ஏற்படுத்த முன்பு பொது நிலையினர் இளைஞர்கள் வாழ்விலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பிரான்சிய அரசியற் புரட்சியின் பயங்கர விளைவுகளால் மக்களின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குறிப்பாக இறைமக்களின் விசுவாச வாழ்வும் ஆட்டம் கண்டது. இவாகளது விசுவாச வாழ்வை வளம படுத்துவதற்கு தான் இறைவனிட்ம் இருந்து பெற்றுக் கொண்ட அருங்கொடை யை மக்களோடு பகிர்ந்து கொள்ள தன்னைக் கையளித்தார். கிறிஸ்து மறையுடல் ஏற்ற மறை உண்மையில் மனிதம் மாண்புற, சிதறுண்ட மக்கள் கிறஸ்துவிலே இணைந்து கொள்ள இறைவன் மாத்திரம் என்னும் ஆன்மீகத்தில் நிறைவைக் காண விசுவாசத்தையும் அன்பையும் பரப்பி ஐக்கியத்தில் உறுதியான திருச்சபையை உருவாக்க அழைக்கப்பட்டார்.

நிறுவுனரின் காலத்தில் வாழ்ந்த மக்களின் உலகியல், ஆன்மீகத்தேவைகளுக்கு பதிலிறுத்ததின் மூலம் நிறுவுனரும் அவரது உடன் உழைப்பாளர்களும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்த சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அவர் உபதியாக்கோனாக இருந்த போதே குருத்துவ மாணவர் சிலருடன் சேர்ந்து மறைக்கல்வி வகுப்புக்களை நடாத்தினார். தனது பணியின் ஆரம்பத்திலிருந்தே நற்செயதிப் பணியில் அத்தியாவசியமானதும், ஈடுசெய்ய முடியாததுமான பொது நிலையினரின் பங்களிப்பை இனம் கண்டு கொண்டார். எல்லாவிதமான கிறிஸ்தவ அர்ப்பணமும் இயேசுக் கிறிஸ்துவிலே கண்டறியப் பட வேண்டுமென்பதில் உறுதி கொண்டிருந்தார். எனவே பியன்வெனு நோ ஆய் அடிகளார் போர்டோவில் உள்ள யூலாலி பங்கிற்குச் சென்றவுடனே வளர்ந்தோருக்கான நிலைமையின் மறைக்கல்வி வகுப்புக்களை ஒழுங்கு செய்தார். இது எல்லோராலும் விரும்பப்பட்டதாகவும் நன்மதிப்புப் பெற்றதாகவும் இருந்ததோடு விரைவாக எங்கும் பரவியது. பரீஸ்பட்டணத்தில் இந்த வகுப்புக்களினால் கிடைத்த நன்மைகளைக் கண்ட பியன்வெனு போர்டோவிலும் எதிர்பார்த்தார். 1819ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ம் நாள் இது இடம் பெற்றது. நோஆய் அடிகள் பல்வேறு நிலையில் உள்ளவர்களை வயது, சமூகநிலை, தகுதி என்பவற்றிக்கேற்ப பிரித்து அவர்களுக்கான ஒழுங்குகளையும் எழுதினார். 1820ம் ஆண்டு இந்த மறைக்கல்வி வகுப்பு ஒரு கழகமாக உருவாக வேண்டுமென்று திருச்சபையின் தலைமைப்பீடத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்டார். அவருடைய இளைய சகோதரி வனி ஆயத்த நிலையில் இருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சில பக்திமுயற்சிகளைப் பயன்படுத்தி செபத்தின் மூலம் முழுக்குழுவுடனும் இணைந்திருந்தார். திருக்குடும்பசபையின் பொது நிலையினர் அழைப்பு என்பது இறைவனிடமிருந்து கொடுக்கப்படும் அழைப்பு. இது இறைவனின் கொடையாக இருக்கின்றது. தமது திருமுழுக்கின் அருளை நிறைவாக வாழ்வதற்கு இந்த ஆன்மீக அப்போஸ்தலிக்க குடும்பத்தில் தம்மை அர்ப்பணிக்கும் அழைப்பு. இவர்கள் திருக்குடும்பத்தின் வாழ்வையும், ஆதிக் க்றிஸ்தவர்களின் வாழ்வையும் தொடர்ந்து வாழ அழைக்கப்படுகின்றார்கள். நம்பிக்கையும், சகோதர அன்பும், ஏழ்மையும், சாந்தம், தாழ்மை, எளிமை, என்னும் பண்புகளைப் பின்பற்றி சபையின் மனப்போக்கில் வாழ்கிறார்கள். இவர்களது வாழ்வில் நற்கருணையும், இறைவார்த்தையும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஓர் அங்கத்தவர் தனது நாளாந்த குடும்ப, சமூக- தொழில் அல்லது வேறு ஈடுபாடுகள் சம்மந்தமான வாழ்வினை கிறிஸ்தவ முறையில் வாழ்ந்து தன்னால் இயலுமான வழிகளில் விசுவாசத்தைப் பரப்புவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றார். நிறுவுனர் காலத்தில் 2500 பொது நிலையினர் வாழ்ந்திருக்கின்றனர். அவரது மறைக்கல்வி வகுப்புக்களில் இணைந்து கொண்ட இளம் பெண்களில் சிலர் தான் துறவிகளாக வர விரும்பி திருக்குடும்ப சபைக்கு வித்திட்டார்கள்.

## யாழ்மாகாண திருக் குடும்பப் பொது நிலையினர்

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 1977ம் ஆண்டு மானிப்பாயில் இரு அருட்சகோதரிகள் 7 பொதுநிலையினருடன் மானிப்பாய் தியான இல்லத்தில் ஆரம்பித்தார்கள். சபையின் ஆரம்ப அறிவையும், அதன் நோக்கம் ஆன்மீகம் என்பவற்றை அறிமுகம் செய்து அந்த அங்கத்தினரை உருவாக்கினர். காலப்போக்கில் ஒவ்வொரு பங்குத்தளத்திலிருந்தும் சகோதரிகளின் வழியாக அங்கத்தவர்கள் இணையத் தொடங்கினர். இவர்களுக்கென்றே பிரத்தியேகமான கையேடுகள், ஒழுங்கு விதிகள், இவ்வித அழைத்தலில் கொண்டிருக்க வேண்டிய குணாதிசயங்கள், அனுசரிக்கப்படவேண்டிய சட்ட திட்டங்கள் காலத்துக்குகாலம் உரோமில் நடக்கும் பொதுசங்கங்களின் பயனாக அனுப்பப்பட்டு வருகின்றன. சகோதரிகள் பொறுப்பாக இருந்து இவர்களை உருவாக்கி, ஊக்குவித்து, வலுவூட்டி வருகிறார்கள், சபையின் அமைப்புகளுக்குட்பட்டு ஆசியாக்கண்டத் தலைவர், இலங்கை தேசிய தலைவர், வலயங்களின் தலைவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள்.

மாதாந்த ஒன்று கூடல் அமர்வுகளால் இவர்கள் ஒருங்கிணைந்து பகிர்ந்து கொள்வதால் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தி அன்புறவையும் சபையின் ஐக்கியத்தையும் பெற்று தங்களை அர்ப்பணிக்கின்றனர். இவர்களுக்கென்றே பிரத்தியேக வாழ்வுக்கு ஒரு வழி என்ற ஒழுங்கு நூலும் உண்டு. இதன் சட்ட திட்டங்களை இயலுமான வரை அனுசரித்து வாழ்வர். இவ்வாறு இறை அருளால் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்த யாழ்-மாகாண பொது நிலையினர் ஏறத்தாள 650 பேர் மிக்க ஆர்வத்துடன் பணியாற்றுகின்றனர். அத்துடன் 16 வலயங்களை உள்ளடக்கி 43 இடங்களில் தமது அழைப்பையும் பணியையும் விரிவாக்கி தமது அழைத்தலை அர்த்தமுடன் வாழ்கின்றனர். வருடாந்த தியானம், ஒன்று கூடல்கள், சபையின் ஏனைய அழைத்தல் அங்கத்தவர்களுடன் இணைந்து பங்கு பற்றும் குடுமப விழாக்கள், சுற்றுலா, இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கு பற்றுதல் போன்றவற்றில்தான் பியன்வெனு நோ ஆய் குடும்பத்தின் உறவைப் பலப்படுத்துகின்றனர். இவர்கள் தங்களுக்கே உரித்தான உறவின் பாலம் என்னும் ஒரு கைநூலைப் பிரசுரித்து எல்லோருக்கும் பயன்பட பரப்புகின்றனர். யாழ் மாகாணத்தைச் சேர்ந்த, கொழும்பு, தலவாக்கல, மட்டக்கலை, அப்புத்தளை, மட்டக்களபபு, திருமலை, மன்னார்வட்டம், வன்னிப்பகுதி, யாழ் குடாநாட்டு திருக்குடும்ப மடங்கள் இருக்கும் பங்குத் தளங்களைச் சேர்ந்த பொதுநிலையினரின் அர்ப்பணிப்பான வாழ்வாலும், பணியாலும் தலத்திருச்சபை வளம் பெற்று இறைவன் மகிமைப் படுத்தப்படுவாராக. இறைவனுக்கே மகிமை

தகவல்
**யூபிலிவிழா அமைப்பாளர்,**
**யாழ்-மாகாண இல்லம்,**
**யாழ்ப்பாணம்.**

— — — — —(முற்றும்)

# கல்லறைத் தோட்டங்கள் எதற்காக?

கெ. இரோனியஸ்

கார்த்திகை மாதம் கத்தோலிக்க திருச்சபைக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த மாதமாக விளங்குகின்றது. இறந்து போனவர்களை நினைவுகூர்ந்து அவர்களுடைய ஆன்ம இளைப்பாறுதலுக்காக செபிக்க அழைக்கப்படுகின்றோம். இதன் ஆரம்ப கூட்டமாக கல்லறைத் தோட்டத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்தில் சிறப்புத் திருப்பலி நடைபெற்று கல்லறைகள் மீண்டும் ஒருமுறை ஆசீர்வதிக்கப்படும். இன்றுமொரு சிறப்பு அம்சமாக கார்த்திகை மாத முதல் நாளிலிருந்து இறுதி நாள் வரை ஆலயங்களில் துக்க மணி ஒலிக்க விடப்படும், இதன் போது இறை மக்கள் அனைவரும் இரக்கமுள்ள இயேசுவே மரித்த விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் என்று சொல்லி இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபிப்பார்கள். இந்த நாட்களில் உத்தரிப்பு தலத்தில் இருப்பவர்களும், யாராலும் நினைவு கூரப்படாமல் இருப்பவர்களும் மற்றும் ஏனைய இறந்து போன விசுவாசிகளும் ஆண்டவருடைய நித்திய பேரின்ப பாக்கியத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக உள்ளன. இந்த மாதம் முழுவதும் ஒரு வித அமைதியையும், சோக உணர்வையும் அவதானிக்க முடியும்.

இந்த அமைதியான சூழ்நிலையில் பின்வரும் விடயங்களை சிந்தித்து சீர்திருத்தம் செய்வது காலத்தின் கட்டாய தேவைகளில் ஒன்றாகும்.

எங்களுடைய யாழ் கத்தோலிக்க மக்கள் பங்குகள், ஆலயங்கள் தோறும் சிறிய பரப்புகளில் கல்லறைத் தோட்டங்களை அமைத்துள்ளனர். இங்கேதான் இறந்து போன அனைத்து கத்தோலிக்க விசுவாசிகளும் புதைக்கப்படுகின்றார்கள். ஏனெனில் கிறிஸ்துவோடு இறந்த அனைவரும் அவரோடு உயிர்த்தெழுவர் என்ற நம்பிக்கையில் அவர்கள் உருவான மண்ணிற்கே திரும்பிச் செல்லும்படி கல்லறைகளில் அடக்கம் செய்யப்படுகின்றனர்.



இன்று பங்குகள் தோறும் கல்லறைத் தோட்டங்கள் உள்ளன. ஆனால் அதனுடைய பராமரிப்பு வேள்விக் குறியாக உள்ளன. அதிகமான கல்லறைத் தோட்டங்களுக்கு எல்லை பாதுகாப்பு வேலி இல்லை. இதனால் இந்த புனித இடத்தை யாரும் எதற்கும் பயன்படுத்தலாம் என்ற நிலைபபாடு ஏறபட்டுள்ளது.

இதை விட மேலாக கசிப்பு, போதைப் பொருள் போன்றவைகளை கள்ளமாக மறைத்து வைப்பதற்கும், கல்லறைகளில் அமர்ந்திருந்து அருந்துவதற்கும், வெற்றுப்போத்தல்களை வீசுவதற்கும், வீட்டுக்கழிவுகளை கொட்டுவதற்கு மலசலம் கழிப்பதற்கும், ஆடுமாடுகளை குருசு மரத்தில் கட்டி மேய விடுவதற்கும் இன்னும் வேண்டாத பற் பல காரியங்களுக்கும் கல்லறைத் தோட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றது. வருடம் தோறும் கார்த்திகை மாதத்திற்காக மாத்திரம் காத்திருந்து சிரமதானம் செய்கின்ற கிறிஸ்தவர்களாக நாம் மாறிவிட்டோம். இது எங்களுடைய கத்தோலிக்க மக்களின் கல்லறைத் தோட்டம் என்று சுட்டிக் காட்டுவதற்கு வெட்கமாக இருக்கிறது. இறந்து போனவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனும் மரியாதையும் இதுதானா?

இன்னும் சொல்லப் போனால் ஒரு சில பங்குகளுக்கு இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு முறையான இடம் இல்லை. இது நிவர்த்தி செய்யப்படுமா? மேலும் கல்லறைத் தோட்டங்களில் இறந்தவர்களின் உறவினர்கள் தாம் நினைத்தவிதமாக கல்லறைகள் அமைப்பதும், நினைவுத் தூபிமீது சுரூபங்கள் வைப்பதும், சிற்றாலயம் போன்று கட்டடங்கள் அமைப்பதும் எதிர் காலத்தில் குடும்பத்துக்கொரு கோயிலாக மாறி விடுமோ என அஞ்சத் தோன்றுகின்றது. மேற்குறிப்பிட்ட விடங்கள் அனைத்தும் ஆலய நிர்வாகத்தினரின் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அவசிய தேவையாக உள்ளன. ஆகவே காலத்தின் தேவையை உணர்ந்து கல்லறைத் தோட்டங்களை புனித இடமாக பேண முயற்சிப்போம்.

# வருடத்தில் ஒரு தடவையேனும் இறைபதம் அடைந்தோரை உணர்வுபூர்வமாக நினைப்போம்

## முகவுரை

கத்தோலிக்க திருச்சபையானது ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தை இறந்த ஆன்மாக்களை நினைத்து இறைவேணடல் செய்ய அழைத்து நிற்பதோடு இம்மாதம் 02ம் திகதியை இறந்த ஆன்மாக்களின் நினைவு தினமாக பிரகடனப்படுத்தி ஆலயங்களிலும் சேமக்காலைகளிலும் விசேட திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து செபிக்கும் நடைமுறையை பின்பற்றி வருகின்றது. மனிதனே நீ மண்ணாய் இரக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய் என்ற திருநீற்றுப்புதன் ஞாபகத்தை மீண்டும் ஒரு தடவை நாங்கள் நினைத்துப் பார்க்கவும், நாமும் ஒரு நாள் இறப்போம் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளவும் இம்மாதம் வழிகோலுகின்றது.

## மரணத்தை நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்வோம்:

கத்தோலிக்க திருச்சபையின் சத்தியங்களின ஒன்று உடலின் உத்தானத்தை விசுவாசிக்கின்றேன் என்பதாகும். இறுதி நாளில் அனைவரும் உயிர்த்தெழும் போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்கு தெரியும் *(யோவான் 11:23)* என்று மார்த்தாள் ஆண்டவன் இயேசுவுக்கு கூறிய வார்த்தையின் மீது நம்பிக்கை கொண்டு இறப்பின் பின்னால் உத்தானம் உண்டு என்பதை விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு இறைபதம் அடைந்த ஒருவரின் உடலை சேமக்காலையின் கல்லறைக்குள் நல்லடக்கம் செய்கின்றோம். கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அறிவிக்கப்பட்டிருக்க இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுக்குள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பது எப்படி *(1கொரி 15:12)* என்ற புனித சின்னப்பரின் கூற்றும் இறப்பின் பின் உயிர்ப்பு உண்டு என்பதை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

## நிலைவாழ்வில் நம்பிக்கை:

இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு, நிலைவாழ்வைப் பற்றிய மறையுண்மைகளை சிந்திக்க வைப்பதோடு, மறைந்து விடக்கூடியவை எவை நிலைத திருக்கக் கூடியவை எவை என்றும் நம்மை சீர்தூக்கி பார்க்க வைக்கின்றது என்று திருத்தந்தை 23ம் யோவான் குறிப்பிடுகின்றார். நீஙகள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள் *(யோவான் 14: 1-3)* என்ற இறை வார்த்தையின் ஊடாக நிலைவாழ்வு உண்டு என்பதை எமக்கு தெளிவாக எடுத்துக் கூறி இருக்கின்றார்.

## அனைவரையும் நினைத்து மன்றாடுவோம்

இறந்தவர்களுக்காக நாம் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகள் மூலமாகவும் இறைவன்

**இ.அ.அமலரட்ணம் - பேராலயம்.**

தமது இரக்கத்தை வெளிப்படுத்தி அவர்களின் ஆன்மாவை மீட்டெடுத்து நித்திய பேரின்ப வீட்டை அருளுகின்றார். என்பது எமது நம்பிக்கையாகும். இறைபதமடைந்தோரின் நினைவுச்சின்னங்களையும் கல்லறைகளையும் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் போது அவர்களோடு எமக்கிருந்த அன்புறவை நாம் மீட்டிப்பார்க்கின்றோம். எனவே இறந்தவர்களை விசேடமாக நினைவுகூருகின்ற இந்த கார்த்திகை மாதத்தில் இவ்வுலகில் வாழ்கின்ற இறையாட்சிப் பயணம் மேற்கொள்ளும் வாழும் திருச்சபையாக இருக்கும் நாம் இறைபதம் அடைந்தவர்களுக்காக விசேட விதமாக மன்றாடுவோம். எம்மை பெற்று வளர்த்து அன்பு செலுத்தி தமது தியாகம் நிறைந்த வாழ்வால் எம்மை உயர்த்தி விட்ட அன்பு பெற்றோர்களுக்காக மன்றாடுவோம். ஒரே தாயின் வயிற்றில் உடன் பிறந்து அன்போடு உறவு கொண்டு வாழ்வின் சோகங்களையும் சுமைகளையும் எம்மோடு பகிர்ந்து அன்றாட சிலுவைகளை எம்மோடு சேர்ந்து சுமந்து வழிநடத்த உடன் பிறப்புக்களை நினைத்து செபிப்போம். அன்போடு கண்டித்து அறிவூட்டி எம்மை உருவாக்கிய ஆசான்களுக்காக இறைவேண்டல் செய்வோம். இன்னும் ஆன்மீக வாழ்வில் எம்மை வழிநடததிய ஞானத்தலைவர்களையும், பங்குத் தந்தையர்களையும் நினைத்து நன்றியுணர்வோடு மன்றாடுவோம். இறுதியாக யாரும் நினையாத அந்தரித்த ஆன்மாக்களுக்காகவும் நாட்டின் போர்ச் சூழலில் அகப்பட்டு இறந்த ஆன்மாக்கள் மற்றும் படுகொலை செய்யப்படட ஆன்மாக்களுக்காகவும் விசேடவிதமாக செபிப்போம்.

## முடிவாக

சேமக்காலை ஒரு புனிதமான இடம் என்பதையும் இறுதி நாளில் இறைமகன் இயேசுவின் சாயலாக உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையோடு நம் முன்னோர்கள் அமைதியில் துயில் கொள்ளுகிறார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டு சேமக்காலையை புனிதமாக பேணுவோம். இறந்தவர்களை நினைக்கின்ற உன்னதமான இந்த மாதத்தில் எமது மரணத்தைப்பற்றி சிந்திக்க நாம் இறைவனால் அழைக்கப்படுகின்றோம். கல்லறைகளை தரிசிக்க இருக்கும் நாம் இக்கல்லறை வாழ்வு எமக்கு வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து ஆன்மீக வாழ்வில் புனிதம் பேணி விழிப்பாய் வாழ்ந்து எம்மையும் மரணத்திற்கு தயார்படுத்த இறையருள் வேண்டுவோம்.

# சென் ஜேம்ஸ் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா



சென் ஜேம்ஸ் பாடசாலையின் வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் T.Y. இரவீந்திரன். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி. J.B. அன்ரனிதாஸ் ஆகியோர் பாடசாலை அதிபர் திருமதி. லூ. மகேஸ்வரன் உப அதிபர் திருமதி. இயூஜின் அவர்களால் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

## திருத்தந்தை முதலாம் ஜான்பால் அவர்கள் பிறந்த நாளின் நூற்றாண்டு விழா

அக்டோபர் 30 மாலை, இத்தாலியின் வெனிஸ் நகரில் திருத்தந்தை முதலாம் ஜான்பால் அவர்கள் பிறந்த நாளின் நூற்றாண்டு விழா ஓர் ஆடம்பரத் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

திருத்தந்தை முதலாம் ஜான்பால் 1912ம் ஆண்டு ஒக்டோபர் 17ம் திகதி வட இத்தாலியின் வெனிற்றோ எனும் பகுதியில பிறந்தார். 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி இவர் திருத்தந்தையாகப் பொறுப்பேற்று, 33 நாட்களுக்குப் பின், செப்டம்பர் மாதம் 28ம் திகதி இறையடி சேர்ந்தார்.

புன்னகை தவழும் திருத்தந்தை என்ற அடைமொழிக்கு உரிய இத்திருத்தந்தை 1969ம் ஆண்டு முதல் 1978ம் ஆண்டு வரை வெனிஸ் நகரின பேராயராகப் பணியாற்றினார்.

## கொண்டாடப்பட்ட திருக்குடும்ப சபையின்.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு, விளக்கம் என்பன ஒவ்வொரு கட்டத் திலும் விரிவாகக் கொடுக்கப்பட்டது. சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், அதிஷ்ட சீட்டிழுப்பு, வீட்டுப்பாவனை பொருட்களின் விற்பனை, தாகம் தீர்க்க பசியாற பானங்கள் உணவு வகைகள் இன்னும் பல்வேறு செயற்பாடுகள் இதில் இடம் பெற்றன. ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா ஒலிபரப்பு நிலையத்திலும், இணையத்தளத்திலும் வெளியிடப்பட்ட பாதச் சுவடுகள் என்னும் ஒளிப்பேழையின் நிகழ்ச்சிகள் யாவும் கால்கோள் சுவடுகள், வரலாற்றுச் சுவடுகள், அனுபவச் சுவடுகள் என்னும் பாகங்களாக பிறிதொரு மண்டபத்தில் கணனியில் ஓடிக்கொண்டேயிருந்தன. பல பாகங்களிலும் இருந்து வந்த மக்கள் கண்காட்சி, விற்பனை என்று வந்தாலும், தம் அறிவையும் ஆன்மீகத்தையும் அகலமாக்கி, ஆழப்படுத்தியதை வெளிப்படுத்தினர்.

ஈற்றில் ஒக்டோபர் 27 எம் நிறுவுனரின் பிறந்த நாள். முப்பொன் விழாவின் உச்ச நிகழ்வாகிய நன்றித் திருப்பலி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பரிசுத்த தந்தையின் பிரதிநிதி அதிவந். யோசவ் ஸ்பிரேறி அவர்களின் தலைமையில் நிறைவேறிய இத்திருப்பலியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள், இரத்தினபுரி ஆயர் கிளீற்றஸ் பெரேரா அவர்கள், யாழ் அமலமரி தியாகிகள் முதல்வர் போல் நட்சத்திரம் அடிகளார், திருக்குடும்ப துணைக் குரு ஜே. நிக்கலஸ் அடிகளார் இணைந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்ததனர். பல மறைமாவட்ட குருக்கள், துறவற சபைக் குருக்கள், துறவியர், பொது மக்கள், பாடசாலைப் பிள்ளைகள் இப்பலியில் நன்றியோடு கலந்து கொண்டனர்.

யாழ் ஆயர் இல்ல சிற்றாலயத்திலிருந்து புறப்பட்ட வருகைப் பவனியில் திருக்குடும்ப பிள்ளைகள், சாரணியர் புனித பத்திரிசியார் கல்லூரி சாரணர் அணிவகுக்க யாழ் திருக்குடும்ப தேசிய பாடசாலை மாணவியரின் வாத்திய இசையுடன் திருக்குடும்ப சபையின் பொதுநிலை அங்கத்தவர்கள், திருமட சார்பற்றோர், துணைக் குருக்கள், தியானயோக சகோதரிகள், அப்போஸ்தலிக்க சகோதரிகள் முன் செல்ல குருக்கள். ஆயர்கள், பரிசுத்த தந்தையின் பிரதிநிதி அவர்கள் பவனியாக பேராலய முன்றல் சென்று எம் கலாச்சார முறைப்படி வரவேற்கப்பட்டனர். ஆதித்தாய்மாரின் வருகையின் அடையாளமாக ஒரு சிறிய வள்ளம் அதில் ஆயர் சமேரியா, ஆறு கன்னியர்களின் உருவம் தாங்கிச் செல்லப்பட்டு, பாஸ்கு மெழுகு வர்த்தியுடன் திருப்பீடம் வைக்கப்பட்டது.

திருப்பலி ஆங்கிலத்திலும், தமிழிலும் மறையுரை ஆற்றப்பட்டது. ஏராளமான மக்கள், தென் பகுதி அருட்சகோதரிகள் உட்பட, இந்நன்றிப்பலியில் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்தனர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், இலத்தீன் மொழிகளில் பாடல்கள் இசைக்கப்பட்டன. பரிசுத்த திருத்தந்தையின் ஆசீருடன் நிறைவு பெற்ற திருப்பலியில் பின்னர் அனைவரும் ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

பி.ப 4.30 மணியளவில் விழாக்கோலம் பூண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விழாவின் முக்கிய விருந்தினர்கள். நாதஸ்வர இசையுடன் அழைத்து வரப்பட்டு, குத்து விளக்கேற்றி இறை வணக்கம் இசைக்கப்பட்டு மாகாணத் தலைவியின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முப்பொன் யூபிலி மரலான Bountiful Blessings யாழ் திருக்குடும்ப மாகாண முதல்வர் அருட்சகோதரி யோலன்ட் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டு, சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டன. இடையிடையே சிறப்புப் பிரமுகர்களான யாழ் மேயர், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், அமதிகளின் யாழ் மாகாண முதல்வர், திருக்குடும்ப தியான யோக கிளை முதல்வர், பரிசுத்த திருதந்தையின் பிரதிநிதி, யாழ் ஆயர் என்பவர்களால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. யாழ் திருக்குடும்ப தேசிய பாடசாலை மாணவியர், வவுனியா இரம்பைக் குளம் தேசிய பாடசாலை மாணவியர், இளவாலை சிறுவர் இல்ல மாணவியர், திருக்குடும்ப கன்னியர்கள், பிள்ளைகள், திருமறைக் கலாமன்றத்தினர் ஆகியவர்களால் நடனம், பாடல்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. இடைவேளையில் யூபிலி கேக் மேடையில் வெட்டப்பட்டு, திருகுடும்ப சபையை சார்ந்த பிள்ளைகளுக்கு பரிமாறப்பட்டது. பணித்தளங்களில் இணைந்து எந்த வேளையிலும் மனமுவந்து தங்கள் நேரத்தையும், ஆற்றல்களையும் நல்கிய சகோதர சகோதரிகளில் நால்வர் பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் யாழ் மாகாண ஆலோசகர் அருட்சகோதரி ஜீவமலர் அவர்களால் நன்றியுடைர வழங்கப்பட்டு, Bountiful Blessings என்னும் பாடலுடன் முப்பொன் யூபிலி விழா அனைவரின் மன மகிழ்வோடும், திருக்குடும்ப ஆசீரோடும் நிறைவு பெற்றது.

# மறைக்கோட்ட மேய்ப்புப்பணிப் பேரவை

தொடர் முற்றுப் பெற்றது

## யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவை

### 01.அமைப்பின் பெயர்

இது யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவை என அழைக்கப்படும்.

### 02. பேரவையின் நோக்கமும் பணிகளும்

காலத்தின் தேவைக்கும் இறைத்திட்டத்திற்கும் உகந்த வகையில், யாழ் மறைமாவட்டத் திருச்சபையை பங்கேற்கும் திருச்சபையாக வடிவமைத்து, இறையாட்சியை நோக்கிப் பயணிப்பதை நோக்கமாகக் கொண்டு இப்பேரவை இயங்கும். இந்நோக்கை அடைய, பின்வரும் பணிகளை முன்னெடுக்கும்.

2.1 ஒவ்வொரு ஆலயத் திருச்சபையிலும், பங்கிலும், மறைக்கோடடத்திலும் மேய்ப்புப்பணிப பேரவைகளை ஊக்குவித்து செயற்படுத்துதல்.

2.2 மறைமாவட்ட நடப்பாண்டுச் செயற்திட்டங்களை முன்மொழிந்து மீளாய்வு செய்தல்.

2.3 மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கி, மீளாய்வு செய்து, ஆலோசனைகளை வழங்குதல்.

2.4 ஆயரின் அறிவுறுத்தல்களையும், தீர்மானங்களையும் நிறைவேற்ற ஆவன செய்தல்.

2.5 சமகாலப் பிரச்சனைகளை எதிர் கொள்ளவும், மறைமாவட்டத்தின் உடனடித் தேவைகளில் முன் முயற்சிகளை மேற்கொள்ளவும் ஆவன செய்தல்.

2.6 கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட வீத நிதியை மறைக்கோட்ட மேய்ப்புப்பணிப் பேரவைகளிடமிருந்து மறைமாவட்ட பேரவையின் செலவுகளுக்காகப் பெற்றுக் கொள்ளுதல்.

### 03. பேரவையின் அமைப்பு

3.1 யாழ் மறைமாவட்ட ஆயரே பேரவையின் தலைவர்.

3.2 பணித்தகுதி அடிப்படையில் மறைமாவட்ட குரு முதல்வர், நிதிப்பரிபாலகா, நீதிப்பொறுப்பாள், தலைமைச்செயலர், மறைக்கோட்ட குருமுதல்வர்கள், பெரிய குருமட அதிபர், மறைக்கோட்ட மேய்ப்புப் பேரவைகளின் செயலர்கள், உபசெயலர்கள், பொருளாளர்கள் ஆகியோரும்,

3.3 பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைகளின் தலைவர்கள் (பங்குத்தந்தையர்), செயலர்கள், பொருளாளர்கள் ஆகியோரும்,

3.4 மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவற சபைகளின் உயர் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளும்,

3.5 மறைமாவட்ட ரீதியில் இயங்கும் பொதுநிலையினரின் அமைப்புக்கள், பக்திச்சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரும்,

3.6 சிறப்புத் தேவை, தகுதி கருதி ஆயரால் நியமனம் பெறும் உறுப்பினர்களும்,

3.7 மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்க பாடசாலைகளின் அதிபர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளும்

3.8 மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரும் உறுப்புரிமை பெறுவர்.

3.9 மேற்படி உறுப்பினர்கள் மத்தியிலிருந்து மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவைக்கான பொதுச் செயலர், உபசெயலர், பொருளாளர் ஆகியோர் சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் பொதுநிலையினராகவே இருப்பர்.

### 0.4 செயற்குழு

4.1 ஆயர்

4.2 பொதுச்செயலர், உபசெயலர், பொருளாளர்

4.3 பணித்தகுதியின் அடிப்படையில் அங்கத்துவம் பெறுவோர்

4.4 ஆணைக்குழுக்களின் தலைவர்களும் செயலர்களும்.

### 05. கூட்டங்கள்

5.1 பேரவையின் பொதுக்கூட்டம் ஆண்டுக்கு ஒரு முறை நடப்பு ஆண்டின் இறுதியில் இடம் பெறும். நடப்பாண்டின் செயற்திட்டங்களின் மீளாய்வும், புதிய ஆண்டுக்கான திட்டமிடல் ஆலோசனைகளும் இக்கூட்டத்தின் முக்கிய ஆய்வுப் பொருளாக அமையும். இக்கூட்டத்தில் ஒவ்வொரு ஆணைக் குழுவும் தமது செயற்பாட்டு அறிக்கையை ஆய்வுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

5.2 செயற்குழுக் கூட்டம் ஆண்டுக்கு மூன்று முறை இடம் பெறவேண்டும்.

# மோட்சமா? நரகமா?



மிக்கேல் தூய கத்தோலிக்கத் தேவாலயம்
அதில் மிக்கேல் சம்மனசு சுரூபம்
ஒய்யாரமாய் காட்சி அளித்தது.

பசாசின் மேல் ஏறி நின்று கொண்டு...
அதன் வயிற்றில் ஈட்டியைப் பாய்ச்சியபடி...
ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது
அந்த தூய மிக்கேல் சுரூபம்.

தட்டுத் தடுமாறியபடி
ஆலயத்தில் நுழைந்தாள் ஒரு பாட்டி.

மரியாயின் சேனை சபைத் தலைவி அவர்.
சம்மனசை வணங்கி நெஞ்சுருகச் செபித்தர்:

'மிக்கேல் ஆண்டவரே...
இந்தக் கட்டையக் கொஞ்சம் காப்பாற்றப்பா!'

இதைப் பார்த்தார் ஆலயப் பங்குத்தந்தை
பாட்டியின் பக்தியை மனதுக்குள் மெச்சினார்.

பக்தியோடு செபத்தை முடித்துவிட்டுப்
புறப்பட்டார் பாட்டி.

கிளம்பும் முன்..
பக்தியோடு மிக்கேல் அதிதூதரைத் தொட்டு வணங்கினாள்.

அதே பக்தியோடு
கீழே கிடந்த பசாசையும் தொட்டுக் கும்பிட்டார்.
ஆலயத்தை விட்டுக் கிளம்பினார்.

பார்த்த பங்குத்தந்தை அதிர்ச்சியடைந்தார்.

தடுத்து நிறுத்திக் கேட்டார்:

'பாட்டி...
சம்மனசைக் கும்பிட்டாய். சரி.
போகிற போக்கில் பசாசையும் கும்பிட்டுப்
போகிறாயே..
ஏன் பாட்டி..?'

தள்ளாடி நடந்தபடி சொன்னார் அந்த 'உஷார்' பாட்டி:

'அதுவா சுவாமி..
எப்ப இருந்தாலும் இந்தக் கட்ட சாகத்தான் போவுது.
சொர்க்கத்துக்குப் போனா...
சம்மனசு பத்துக்கட்டும்..!
நரகத்துக்குப் போனா...
பசாசு பாத்துக்கட்டும்..!'

**கடவுளையும் காசையும்
ஒரே நேரத்தில் வழிபட முடியாது..!**

# அர்த்தமுள்ள அமைதி!

இரயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இருவர் எதிர் எதிரே அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் தனது கையை வெளியே எதார்த்தமாக நீட்ட அவரது கையிலிருந்த விலையுயர்ந்த கைக்கடிகாரம் கழன்று விழுந்து விட்டது. கடிகாரம் விழுந்த உடன் அந்த மனிதர் மிகவும் வேதனைப்பட்டு துடித்துப் போய்விட்டார். ஆனால் அவர் எதிரில் அமர்ந்திருந்த நபர் அதைப்பற்றிக் கண்டு கொள்ளாமலே பயணித்துக் கொண்டிருந்தார். உடன் இருந்தவர்களுக்கோ அவரது செயல் ஆச்சரியமாக இருந்தது.

வண்டி அடுத்த இரயில் நிலையத்தில் வந்து நின்றது. அமைதியாக அமர்ந்திருந்த அந்த நபர் இரயில்வே அதிகாரியை அழைத்து, இரயில் பாதையில் கடிகாரம் எந்தத் தந்திக் கம்பத்தின் அருகில் விழுந்துள்ளது என்பதைக் கூறி எதிரே இருந்தவரின் முகவரிக்கு அந்தக் கடிகாரத்தை அனுப்பி விடுமாறும் கூறினார். இப்படி மற்றவர்கள் டென்ஷனான நேரத்தில் நிதானமாக எங்கு விழுந்தது என்ற கவனித்து செய்ய வேண்டியதைச் செய்த மாமனிதர்தான் மூதறிஞர் இராஜாஜி.

பெரிய மனிதர்கள் எப்போதும் நிதானம் இழப்பதில்லை. அதனால் தான் மலைபோலப் பிரச்சனைகள் வந்தாலும் நிதானமாக அதைச் சமாளிக்கிறார்கள்.

**நம் கடமையைச் செய்வோம். நடப்பது நடக்கட்டும் என்று இருப்போம். கடமையைச் செய்வதற்கே நமக்கு உரிமை உண்டு.**

" டாக்டர் மு. வரதராசனார்

# சில்லாலைப் பங்கின் மறைக்கல்வி விழா - 2012

எல்லோருக்கும் மறைக்கல்வி என்ற கருப் பொருளின் அடிப்படையில் மறைக்கல்வி ஆண்டில் சில்லாலைப் பங்கின் மறைக்கல்வி வாரமானது 16-09-2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மறைக்கல்வி வாரம் கொடியேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமாகியனது முதல் நிகழ்வாக மறைக்கல்வி கொடியினை சில்லாலைப் பங்குத்தந்தை அருட்பணி. நேசநாயகம் அடிகளார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து திங்கள் முதல் சனிக்கிழமை வரை மறைக்கல்வியின் அடிப்படைப் பண்புகளான விசுவாசம், இரக்கம், அன்பு, மனம் வருந்துதல், அழைப்பு, பலன் கொடுப்பீர் போன்ற கருப்பொருட்களிலே மாலை 5 மணிக்கு நற்கருணைநாதர் சபைக் குரு அருட்பணி. யு.இம்மானு வேல் அடிகளாரால் சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மறை யுரைகளின்போது ஆழமான சிந்தனைகளும் வழங்கப்பட்டன. இத்திருப்பலிகளை ஒவ்வொரு வகுப்பு மாண வர்களும் சிறப்பித்தனர். மறைக்கல்வி வார இறுதி நாளான 23-9-2012 அன்று மறைக்கல்வி விழா சில்லாலைப பங்கின் உபபங்குகளான சங்கானை, மூளாய் ஆகிய பங்குகளையும் ஒன்றினைத்து அனைத்து மறையாசிரியர்கள், மாணவர்கள் - பெற்றோர் ஒன்றிணைத்து சில்லாலை தூயகதிரை அன்னை ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு அருட்பணி. செப மாலைப் பெரேரா(அ.ம.தி) அருட்பணி யு. இமமானுவேல் (ந.நா.ச) பங்குத்தந்தை ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினார். இத்திருப்பலியின் போது மறையுரையாற்றிய அருட்பணி. செபமாலைப் பெரேரா மறைக் கல்வியானது குடும்பங்களிலே ஆரம்பிக்கப்பட வேண்டும் மறைக்கல்வி என்பது நாம் அன்றாடம் வாழும் வாழ்க்கையாக மாற்றப்பட வேண்டும். அப்போது தான் நாம் இயேசுவை மற்றவர் களுக்கு கொடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

திருப்பலியைத் தொடர்ந்து மறைக்கல்வி ஆண்டின் சிறப்பம்சமாக வண.டெய்சி மண்டபத்தில் மறையறிவு நூல் நிலையத் திறப்பு விழாவும் கலை நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சுகவாழ்வு நிலைய இயக்குனர் அருட்பணி. ஆ. செபமாலை பெரேரா (அ.ம.தி) அவர்களும், சிறப்பு விருந்தினராக சில்லாலை றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு யோ.எட்வேட் பங்கிராஸ் அவர்களும், கலந்து சிறப்பித்தனர். விருந்தினர்களின் வரவேற் பைத் தொடர்ந்து மறையறிவு நூல் நிலையத்தினை அருட்பணி. A. இம்மானுவேல் (ந.நா.ச) அவர்கள் நாடா வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட போட்டி களிலே வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டதோடு இம்முறை திருவிவிலிய வினாவிடைத் தேர்விலே யாழ். மறைமாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட தரம் 9 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மறைக் கல்வி வாரக்கொடி இறக்கத்துடன் காலை 11.00 மணிக்கு நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவு பெற்றன.

# மக்களின் செபங்களில் நிறைந்திருப்பவள் புனித கன்னி மரியாள்!

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் மரியாள் வணக்கம் சிறப்பிடம் பெறுவது பேருண்மை. ஏனெனில் இறைவனுக்குகந்த இதயம் உடையவளாக விளங்குபவள் எம் அன்னை. மக்கள் இறைவனை நாடவும், தம் வாழ்வால் இறைவனைப் பிரதிபலிக்கவும் கற்றுகொடுத்து வழிகாட்டுபவர் அன்னையே. திருமறைத் தந்தையர்களும், திருச்சபையோடு ஒன்றுபட்ட இறைவல்லுனர்களும், மரியாள் துணையின்றி எந்த மனிதனும் ஈடேற்றம் அடைய முடியாது என்று கற்பித்தனர். இறைவனின் மீட்புத்திட்டத்தை நாம் விளங்கிக் கொள்ள வேணடும். அதாவது மனுவுருவான அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய் இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்படைகிறோம் *(எபே 1:7)*. கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதனான இயேசுக் கிறிஸ்துவே. இவர் அனைவரின் மீட்புக்காக தம்மையே கையளித்தார் *(1திமோ 2:5-6)*. ஆனால் அவர் இம்மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மனுக்குலத்தின் பிரதிநிதியாக புனித மரியாளையே தேர்ந்து கொண்டார். மரியாளோ ஆகட்டும் என்னும் வாக்குறுதியால் இறைவனுக்கு கீழும் அவருடனும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மீட்புத் திட்டத்தில் பங்கேற்றாள் என சங்கவுரை கூறுகிறது. இதனால் அன்னையின் அளவற்ற வல்லமையை நம்பி, அன்னைக்குரிய அன்புணர்வோடு அவள்பதம் வரும் மக்களின் செபங்களில் அன்னை நிறைந்திருப்பது கண்கூடு இறைவனின் நித்திய திட்டத்தில் மரியாளின் பொறுப்பு எத்தகையது என்பதைப் பற்றி திருத்தந்தை 10ம் பததிநாதர் அழகாகக் கூறுகிறார். கன்னி மரியாளுக்கும் கிறிஸதுவுக்கும் இடையே உள்ள மன ஒன்றிப்பு, பாடுகளின் ஒன்றிப்பு என்பவற்றால் மரியாள் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குல மட்புகரு காரணமானாள். கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த பெறுபேறுகளை பகிர்ந்தளிப்பவளாக மரியாள் காட்சி தருகிறாள். ஆதலால் அவளே வரங்களை வளங்கும் முதல் பணியாளரா கிறாள் என்கிறார் திருத்தந்தை. இவ்வாறு திருச்சபையின் தலைவர்களும் தந்தையர்களும் மரியாள் வணக்கத்தின் மேன்மையினையும், நாம் செபமாலை மூலமாக செபிக்க வேணடியதன் தேவையினையும்,




முக்கியத்துவத்தினையும் எமக்கு கற்பிக்கிறார்கள். செபமாலையின் மூலமாக வரலாற்றில் திருச்சபை சாதித்த வெற்றிகளை சான்றாக கொண்டு மரியாள் ஊடாக இறைவனைப் புகழ, ஐப்பசி மாதத தினை செபமாலை மாதமாக திருசசபை கொண்டாடி வருகிறது. செபமாலையில் நாம் செபிக்கும் மறை நிகழ்சிகள் மீட்புத்திட்டத்தில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கையையே எமக்கு புலப்படுத்துகிறது. மேலாக செபமாலையின் மூலமாக மரியாளுடன் இணைந்து அருள் வாழ்வில் பங்கெடுக்க அவர்களது படிபினைகள் எம்மை அழைத்து நிற்கின்றன.

மரியாள் என்னும் மறைபொருள் இறைவனின் ஞானத்திலே அவரது மேலான திட்டத்திலே தோன்றியதொன்றாகும். இதன் உண்மைத் தன்மையை ஆழ்ந்த விதத்திலே சிந்தித்து அவற்றின் ஒளியில் நமது விசுவாச வாழ்வை கட்டியெழுப்புவதுதான் மரியாள் வணக்கத்தின் நோக்கமாகும். எனவே மரியாள் வணக்கம் என்பது வெறும் உணர்ச்சி சமமந்தமானதொனறல்ல. அவ்வாறிருப்பின் மரியாளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம். நற்செய்தியில், மரியாள் இறைவனின் வார்த்தையை ஏற்று அதன்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கினற மாதிரிகையுள்ள கன்னியாக, பொறுப்புள்ள ஓர் அன்னையாக சித்தரிக்கப்படுகிறாள். கடவுளின் திட்டத்தில் நமபிக்கை கொண்டு, அவர் செயலிலே ஓர் தெளிவைப் பெற்று, இயேசுவை யாரென தன் உள்ளததில் சரியாக இனங்கண்டு, அவருடைய சீடர்களுக்கும், மக்களுக்கும் இயேசுவை வாழ்வதற்கு மாதிரிகை காட்டியவள் தான் அன்னை மரியாள்.

கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாச வாழ்வில் நடு நாயகமாகத் திகழ்பவர் கிறிஸ்துவே. அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற மறைபொருளில் தான் எமது கிறிஸ்தவ விசுவாசம் கட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குலத்தின் மட்புக்காக தன்னை தியாகம் செய்த வரநங்கையாகிய எமது அன்னையை எம் மனங்களில் சுமப்பதும் எமது செபங்களில் இணைப்பதும் தகுதியானதே. அன்னையை அம்மா என்ற உன்னத வார்த்தை மூலமாக உறவு கொண்டாடும் நாம், அன்னையின் வாழ்வில் ஒளிர் விட்ட சிறந்த பண்புகளும் மதிப்பீடுகளும் எமது வாழ்விலும் உருவம் பெற நாம் அன்னையின் மூலமாக செபிக்க வேண்டும். வாழ்வின் அன்றாட பிரச்சினைகளையும், சவால்களையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ள செமாலை தியானம் எம்மை இட்டுச் செல்ல வேண்டும். இந்த மனநிலையோடு இம்மாதம் முழுவதும் செபமாலை தியானத்தினூடாக இறைவனின் அருளை நாடுவோம். இம்மாநிலத்தின் ஈடேற்றத்திற்காக அன்னையை மாதிரிகையாக்கி இயேசுவின் வழியில் இறைவனிடம் செபிப்போம்.

# அனுதாபங்கள் வேண்டாம்

எழுதுகோலகளே!!
ஏடுகளில் எங்கள் எதிர்காலங்களை
மறைவாக பொறியுங்கள்...

இரைப்பை உருக்கும் பசிகளும்
உறக்கம் வெறுக்கும் இரவுகளும்
உடலை எதிர்க்கும் வெயில்களும்
உள்ளம் கொள்ளைபோகும் எதிர்பார்ப்புக்களும்
இத்தனையும் எங்கள் இதயக்கசிவுகளே...

மௌனமாய் குவிந்து விரியும்
மென்மையான எம் உதடுகள் கூட
ஈன்றவளைப் புகழமுடியா...
இறுதி வரை இருப்பதை அறிவாயா...

நிறைவாய் வாழும் உடன் பிறவோனே...!!
குறையோடு வாழும் எங்களுக்காய் – நீ
அனுதாபம் தரவேண்டாம், அமைதியாய் வாழவிடு...

எம் வெற்றுடல் தாங்கும் வீதிகளே!!
உனக்கும் யுத்ததர்மம் தெரியாதா...
நிராயுத பாணிகளாய் நிற்கும் எங்களுடன்
நிரந்தரமாய் போர்தொடுப்பதேன்...

மனிதமே...!
எமக்காக அமைக்காதே தனியிடங்களை
எம் எல்லை மண்ணைக் கேட்கமாட்டோம்
உம் சுகங்களைப் பறிக்கமாட்டோம்
உம் அன்பே போதும்
அனுதாபங்கள் வேண்டாம்.

தொகுப்பு: ஜதீஸ்குமார் பிறெட்றிக் ஜோன்சன்
புனித வளனார் சிறியகுருமடம் - கொழும்புத்துறை.



## விண்ணக வாழ்வின் 24 ஆண்டுகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1912 - 02 - 22 | 1988 - 11 - 05 |

## திரு. P.J. அமிர்தநாயகம்

(ஆசிரியர். புனித. பத்திரிசியார் கல்லூரி)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இவ்வுலக வாழ்வில் இவருடாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றி கூறுகின்றோம். இவர் மீது இரங்கி விண்ணக பேரின்பத்தை இவர்க்கு அளித்திடும் இறைவா!

இளைப்பாற்றி திருப்பலி 05-11-2012 அருள் ஆச்சிரமத்தில் காலை 6மணிக்கும், புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் காலை 6மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்

Add: 93/12

## விண்ணக வாழ்வில்

# 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 07 - 10 - 1958



விண்ணில் 06 - 11 - 2011

## அருள்தந்தை அந்திரேஸ்பிள்ளை சகாயதாசன்

குருத்துவம்
04-08-1984

**"மூவுலகணிகளின் ஆண்டவரே, உமது உறைவிடம் எத்துணை இனிமையானது"**

மெல்கிசெதேக் முறைப்படி என்றென்றும் குருவான ஆண்டவர் இயேசுவே, உமது மகன் அருள்தந்தை சகாயதாசனின் பணி வாழ்வுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். சிலுவையில் நீர் சிந்திய உமது திரு இரத்தத்தால் இவரைத் தூய்மையாக்கி, உமது இன்ப சந்நிதியில் காத்தருள மன்றாடுகிறோம். ஆமென்.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Add: 94/12

## மீண்டும் புதிதாய்...

*(7ம் பக்கத் தொடர்ச்சி)*

புள்ள உடன் உழைப்பாளிகள் என்கின்ற கருத்துக்கள் பங்கேற்புத் திருச்சபை என்ற எண்ணக்கருவில் உள்ளடங்கியிருக்கும் உள்ளீடுகளாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவடைந்ததன் 20 ஆண்டுகள் நிறைவைக் குறித்து 1985இல் கூட்டப்பட்ட ஆயர் மன்றம் சங்கத்தின் போதனைகளுள் மையமானது எது என்பதைத் தேடிய போது அது ஒன்றிப்பு திருச்சபையியல் - (Communion Ecclesiology) என்றே கருதியது.

திருச்சபை என்பது நம்பிக்கை கொண்டோரின் குழுமம் என்ற எண்ணக்கரு தொடக்க திருச்சபையிலே மிகத் தெளிவாக வெளிவந்தது. ஆயினும் திருச்சபை பரந்து விரிந்து பரவத் தொடங்கியபோது அது படிபடியாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. அந்நிலையில் திருச்சபையின் சாரமாகிய குழும வாழ்வு தொலைத்து நிர்வாகமும் நிறுவனமுமே எஞ்சி நின்றது.

இந்நிலையில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் சாரம் குழும வாழ்வே என்பதை மீளக் கண்டுபிடித்து எமக்கு தந்தது. உண்மையில் இன்று திருச்சபையின் முன்னுள்ள சவால் இத்தகைய பணிக்குழுமங்களாக எமது தலத்திருச்சபைகளை கட்டியெழுப்புவதே.

# விசுவாச ஆண்டுக்குப் பன்னாட்டு இறையியல் கழகத்தின் செய்தி

விசுவாச ஆண்டுக்கு மையமாக அமைந்தள்ள மனமாற்றத்துக்காக உழைக்கவும், திருஅவைக்குச் செய்யும் தனது பணியின் அர்ப்பணத்தைப் புதுப்பிக்கவும் இந்த விசுவாச ஆண்டில் விரும்புவதாக இறையியல் கழகம் அறிவித்துள்ளது.

இந்த அக்டோபர் 11ஆம் திகதி தொடங்கியுள்ள விசுவாச ஆண்டைமுன்னிட்டு செய்தி வெளியிட்டுள்ள இந்த இறையியல் கழகம், புதிய நற்செய்தி அறிவிப்புப்பணிக்குத் திருப்பீடத்துக்கு அனைத்து உதவிகளைச் செய்ய விரும்புவதாகவும் அறிவித்துள்ளது. இறையியலாளர், விசுவாசத்தின் சாரத்தை இன்னும் ஆழமாய்ப் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல், முழு சுதந்திரத்துடன் இறைவனுக்கு தங்களை அர்ப்பணிக்கவும் செய்கின்றனர் எனவும் அச்செய்தி கூறுகின்றது.

பன்னாட்டு இறையியல் கழகத்தை வழிநடத்தும் திருப்பீட விசுவாசப்பரப்புப் பேராயத் தலைவர் பேராயர் ஜெறாட் மூலர் இக்கழகத்தின் ஆண்டுக்கூட்டத்தின் போது வருகின்ற டிசம்பர் 6ம் தேதி உரோம் புனித மேரி மேஜர் பசிலுக்காவுக்குத் திருப்பயணம் மேற்கொண்டு, இந்த விசுவாச ஆண்டில் இக்கழகம் செய்யவிருக்கும் பணிகளை அன்னைமரியாவிடம் அர்ப்பணிப்பார் என்று அச்செய்தி கூறுகின்றது.

# உரையாடல் இல்லையேல் இன்று உலகம் இல்லை!

**அலசலும் உரசலும் 11**

**சமகால சமூக ஆன்மீக தொடர்**

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

உரையாடல் இல்லை என்ற ஒரு நிலையில் வாழ்கின்றோம். உரையாடல் மூலம் இன்று குடும்பத்தில், ஊரில், தேசத்தில், ஏன் உலகளவில் எத்தனையோ பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படுகின்றன. சண்டைகளும், சச்சரவுகளும், யுத்தங்களும் தவிர்ககப்படுகின்றன. சண்டையிடாமல் பேசிக்கொண்டிருப்பதே மேல் என்று கூறுவார்கள். வீணை வாசிப்பவன் வீணையுடன் உறவாடுகின்றான். அருமையான சங்கீதம் வெளிவருகின்றது. தச்சுவேலை செய்பவன் மரம் சுத்தி உளியுடன் உறவாடுகின்றான். நாற்காலி வடிவம் பெறுகின்றது. சிற்பி கல்லோடும் உளியோடும் உறவாடுகின்றான் அழகிய சிலை உருவாகின்றது. உரையாடலின் உண்மையான அர்த்தம் உறவாடலேயாகும். உறவே வாழ்வு என்பது புரியாமல் வாழ்வின் முகவரியை தேடிக் கொண்டிருக்கின்றனர். தமது முகவரியை செல்வத்திலும், செல்வாக்கிலும், பதவியிலும், அதிகாரத்திலும் தேடுவது வாழ்க்கையல்ல.

## உரையாடல் உறவை வளர்ப்பதற்கே

உரையாடலின் நோக்கம் நேர்மறையானது. உரையாடல் காலத்தை கடத்தும் செயற்பாடல்ல, மாறாக ஒருவரையொருவர் புரிந்து, விட்டுக்கொடுத்து, உறவுகளை உண்மைத்தனமான முறையில் கட்டியெழுப்புதலாகும். உரையாடல் உறவை வளர்க்கும் உன்னதமான பணியை செய்ய வேண்டும். மக்களிடையே மனித நேயம் வளர்க்க பாடுபட வேண்டும். வேற்றுமையிலும் ஒற்றுமையை காணும் சக்தி உரையாடலுக்கே உண்டு. உரையாடல் மூலம் ஏற்படுத்தப்படும் உண்மையான உறவின் மூலம் எட்டப்படும் தீர்வுகளே நிரந்தரமானது. திறந்த மனத்துடனும், நம்பகத்தன்மையுடனும், உள்ளரங்க நிகழ்ச்சி இல்லாத உரையாடல்களே உன்னதமான உறவுகளுக்கு வழிவகுக்கின்றது. இன்று நமது தேசத்தின் பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும். இதய சுத்தியில்லாமல் நடாத்தும் உரையாடல்கள் சந்தேகத்திற்கும், ஒரு முடிவை எட்டுகின்ற பாதையில் தடைக்கற்களாகிவிடும். இன்று குடும்பங்களிலும் கூட நேரடியான உரையாடல் செய்யும் இடத்தை தொலைக்காட்சியும், கைத்தொலைபேசிகளும் நிரப்பியுள்ளன. இதனால் குடும்பங்களில் உரையாடல் இல்லாமல் உறவுகள் இல்லாமல் வாழும் மேலோட்டமான வாழ்க்கை முறைக்கு மாறியுள்ளது. குடும்ப உறவுகளில் பிரச்சினைகள் தீராமைக்கு காரணம் உரையாடல் இன்மையாகும் என்பது உண்மையே. பெற்றோர்கள் - பிள்ளைகள் உரையாடலின்றி வாழ்வதால் இடைவெளி அதிகரித்து செல்கின்றது. கைத்தொலையாடலின்றி வாழ்வதால் இடைவெளி அதிகரித்து செல்கின்றது. கைத்தொலைபேசிகளே உரையாடலுக்கு மாற்றாக மாறியுள்ளது. காலப்போக்கில் நேரடியாக பேசுவதற்கே நேரமில்லாமல் போகும் நிலை ஏற்படும் அபாயமுண்டு. இதுவும் இன்றைய பிரச்சினைகளுக்கு காணரமாகும்.

## உரையாடலின் ஊற்று இறைவனே

மீட்பு வரலாறு முழுவதுமே இறைவன் - மனித உறவை வளர்த்த உரையாடலின் தொகுப்பு நிகழ்வே என்று கூறலாம். கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை மூவொரு இறைவனில் உள்ள நம்பிக்கையே. இறைவன் உறவாய் வாழ்வதினால்தான் மனிதனை தனது சாயலாகப்படைத்து மனிதரோடு உறவு கொள்ள விரும்பினார். இத்தகைய உறவின் பயணத்தில் எழுச்சியும், வீழ்ச்சியும் உண்டு என்பதை மீட்பு வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. இறையுறவில் வாழ்வது என்பது அடுத்தவர் உறவோடும் தொடர்பு பட்டது. இறையுறவில் வளர்ந்து கொண்டு அடுத்தவருடான உறவில் இதயக் கதவுகளை மூடிவிடமுடியாது. அது இறையுறவின் நிறைவாகாது. நாம் அடுத்தவருடன் கொள்ளும் உரையாடல்கள் மூலமே கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பாகிய அன்பின் நிறைவை அடைய முடியும். உரையாடல் மூலமே நாம் அடுத்தவரை ஓரளவாவது புரிந்து ஏற்றுக்கொள்ள முடியும். இறைவன் மீட்பு வரலாற்றில் தன்னை அன்புள்ள, இரக்கமுள்ள, மன்னிக்கின்ற இறைவனாகவே உரையாடல் மூலம் வெளிப்படுத்துகின்றார். இத்தகைய இறைவனை ஏற்றுக்கொள்ளும் நாம் அடுத்தவர் மட்டிலும் இரக்கமுள்ளவர்களாக, மன்னிக்கின்றவர்களாக பகிர்கின்றவர்களாக வாழும் போதே உறவு மலர்கின்றது. உரையாடல் மூலமே இதனை நாம் செய்ய முடியும். நாம் வாழும் சமூகத்தில் இறைவனின் பிரசன்னம் எம்மூலமாக வெளிப்படவேண்டுமாயின், அடுத்தவரோடு உரையாடி உறவை ஓரளவாவது வளர்க்க வேண்டும். இதுவே அன்பியத்தின் இலக்காகவும் இருக்கிறது.

## விசுவாச புதுப்பித்தலில உரையாடல்

இன்று உரையாடல் எல்லா மட்டங்களிலும் இடம் பெறும் போது தான் புதுப்பித்தல் ஏற்பட முடியும். ஒரு மறைமாவட்டத்திலே ஆயருக்கும் குருக்களுக்குமிடையிலான உரையாடல்கள் உறவை கட்டியெழுப்புவதாக அமைய வேண்டும். இயேசுவின் தோழமை குருத்துவத்தின் அடித்தளத்தில் திறந்த உரையாடல்கள் மூலம் நம்பகத்தன்மை மூலமும் இத்தகைய ஆயர் - குருக்கள் உறவுநிலை புதுப்பிக்கப்பட வேண்டும். ஆயர் குருக்களை நண்பர்களாக இயேசுவின் மனநிலையில் கருதி உண்மைத்தனமான உறவுகளை வளர்ப்பது விசுவாச புதுப்பித்தலுக்கு முக்கியமானது. இன்றும் குருக்களிடையே ஒன்றிப்பு உண்மைத்தனமுள்ளதாக, ஒருவரையொருவர் துன்பங்களிலும், பணிகளிலும் தாங்கிச் செல்லும் மனநிலையிலும் உருவாக்கப்பட வேண்டும். இறைமக்களிடம் எதிர்பார்ப்பதை குருக்கள் தங்கள் மட்டத்திலும் எதிர்பார்க்க வேண்டும். விசுவாச ஆண்டில் உறவு சார்ந்த புதுப்பித்தல்கள் தனிப்பட்ட மனமாற்றத்தின் மூலமே ஏற்படும். இறைவல்லமையிலும், இறையருளிலும் நம்பிக்கை கொண்டு வாழும் போதே குருக்கள் மத்தியில் சாட்சியமான வாழ்வு வெளிப்படும். இதுவே காலத்தின் கட்டாயமாகும். இதற்கு குருக்களிடையே தங்கள் வாழ்வைப்பற்றிய திறந்த மனத்துடனான உரையாடல் மூலம் உறவை வளர்ப்பது விசுவாசப் புதுப்பித்தலுக்கு முக்கியமானது. சடங்கு குருத்துவத்தை முன்னுரிமைப் படுத்துவதை விடுத்து (Cultic Priesthood) பணிக்குருத்து வத்திற்கு (Servant Priesthood) முன்னுரிமை அளிப்பது முக்கியமானது. இறைமக்களோடும் நம்பிக்கை வாழ்க்கை பற்றிய திறந்த உரையாடல்கள் புதுப்பித்தலுக்கு அவசியமாகும். இதன் மூலம் தற்போதைய விசுவாச வாழ்வைப்பற்றிய மதிப்பீடுகளை பெற்றுக்கொள்ள முடியும். குருக்கள் நமது அதிகாரம் சார்ந்த நிலையை (Clericalism) விடுத்து இறைமக்களின் அருங்கொடைகளையும் இனம்கண்டு பங்கேற்பு திருச்சபையாக மாற்ற பணி - தலைமைத்துவ மாதிரியான வாழ்வை இறை மக்களிடையே வாழும் போது விசுவாச புதுப்பித்தலுக்கு வழி வகுக்கும். விசுவாச ஆண்டு, அறிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும் சில செயற்திட்ட பணிகளோடு நின்றுவிடாது, குருக்களிலும், இறைமக்களிலும் ஒரு வேரோட்டமான மனமாற்றத்திற்கும் நம்பிக்கை வாழ்வின் அனுபவத்திற்கும் இட்டுச் செல்லும் பயணமாக அமைய வேணடும். அப்போது தான் நம்பிக்கை வாழ்வின் புதுப்பித்தலானது இயேசுவை சந்தித்து அனுபவிக்கும் (Encounter with christ) வாழ்வாக மாற்றம் பெறும். இத்தகைய அனுபவத்தேடலே விசுவாச ஆண்டின தேடலாக அமைய வேண்டும்.

(உரசல் தொடரும்)

---

இன்னும் புதிதாய் மலரும்...

# மீண்டும் புதிதாய்...

## திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம்

**இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவையொட்டிய கட்டுரைத் தொடர்**

அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்மொழிந்த வேரோட்டமான மாற்றங்களிலே தலையானது திருச்சபை பற்றிய புரிதலில் ஏற்பட்ட மாற்றமேயாகும்.

சங்கத்தின் முன்னான பாரம்பரியப் பார்வையில் திருச்சபை படிமுறையில் அமையப்பெற்ற ஒரு நிறுவனமாகவே கருதப்பட்டது. இப்படி முறை அமைப்பில் மேலிருந்த பாப்பரசர், ஆயர்கள், குருக்கள் போன்ரோரே திருச்சபையாக கருதப்பட்டனர். கீழ் மட்டத்தில் இருந்த பொது நிலையினர் மிகச் சாதாரண உறுப்பினரே.

படிமுறையில் தமக்கு மேலிருந்த திருநிலையினரின் போதனைகளைக் கேட்பது, அவர்களிடமிருந்து அருட்சாதனங்களைப் பெறுவது, அவர்களுக்கு கீழ்ப்படிவது, அவர்களின் தேவைகளுக்கு நிதியுதவி வழங்குவது இவையே பொதுநிலையினரின் கடமைகளாகக் கருதப்பட்டன.

இதன் விளைவாக போதிக்கும் திருச்சபை போதிக்கப்படும் திருச்சபை, ஆளும் திருச்சபை ஆளப்படும் திருச்சபை, வழிகாட்டும் திருச்சபை பணிந்துநடக்கும் திருச்சபை, பணிபுரியும் திருச்சபை பணி பெறும் திருச்சபை என திருச்சபை இரண்டாக பிளவுவுண்டு காணப்பட்டது. இப்பிளவு நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் சங்கமாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் மலர்ந்தது.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் திருச்சபை ஒரு படிமுறை அமைப்பைக் கொண்டது என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட அதன் திருச்சபை பற்றிய அடிப்படையான கருத்தியல் வேரோட்டமான ஒரு மாற்றத்துக்கு கட்டியம் கூறியது.

திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம் என்ற வேதாகம உருவகத்தை சங்கம் தனது திருச்சபை பற்றிய பிரதான உருவகமாக கையிலெடுத்துக் கொண்டது. நீங்கள் அரச குருத்துவ திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்கு சொந்தமான மக்கள் என்கின்ற பேதுருவின் இறைவாக்குப் பகுதி சங்கத்தின் திருச்சபையை பற்றிய புரிதலின் தொனிப் பொருளானது. அதன் விளைவாக பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ராயேல் மக்களோடு உடன்படிக்கை செய்து அவர்களை தமது மக்களாக ஏற்றுக்கொண்டது போல புதிய ஏற்பாட்டில் இயேசுவின் இரத்ததால் செய்து கொள்ளப்பட்ட புதிய உடன் படிக்கையில் திருச்சபை ஒரு இறைமக்கள் சமூகம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

திருச்சபை ஒரு திருப்பொழிவு செய்யப்பட்ட மக்களினம் (Messianic people) என்ற விடயம் சங்கத்தால் வலியுறுத்தப்பட்டது. இறையாட்சிப் பணிக்கென இயேசு அருள்பொழிவு செய்யப்பட்டது போல திருச்சபையும், அருள் பொழிவு செய்யப் பட்டுள்ளதால் திருச்சபை இயேசுவின் அரச, குருத்துவ, இறைவாக்கு பணிகளில் முழுமையாக பங்குபற்றும் அழைப்பைப் பெறுகிறது. முழுத்திருச்சபையுமே இயேசுவின் இந்த முப்பணிகளில் பங்குபற்றும் அழைப்பைப் பெற்றிருப்பதால் திருமுழுக்கே இப்பணிகளை வழங்கும் அடிப்படை அருட்சாதனம் என்ற தெளிவு ஏற்பட்டது. இது மாண்பைப் பொறுத்தவரையில் திருநிலையினர் பொதுநிலையினர், துறவுநிலையினர் அனைவருமே சமமானவர்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக வெளிக்கொணர்ந்தது.

பொதுநிலையினர், திருநிலையினர், துறவுநிலையினர் என்ற வேறுபாடானது அழைப்பின் தனித்துவத்தைக் குறிப்பதென்பதும் மகத்துவத்தில் அனைத்து நிலையினரும் சமமே என்பதும் அடித்தளமான ஒரு கருத்தியல் புரட்சி. சங்கம் கூடி ஐம்பது ஆண்டுகள் கடந்த நிலையில் இன்னும் கூட இவ்வுண்மை ஜீரணிக்கபபடாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

திருச்சபையின் புரிதல் பற்றி ஏற்பட்ட இந்த மாற்றத்தை சில அறிஞர்கள் கொப்பர்னிகஸ் புரட்சிக்கு ஒப்பிடுவர். பிரபஞ்சம் பற்றிய உலக மைய புரிதலிலிருந்து சூரியமைய புரிதலுக்கு வழிகோலியதே கொப்பர்னிகஸ் புரட்சி, சூரியன் உலகைச் சுற்றி வருகிறது என்ற கருத்து தவறானது மாறாக உலகுதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மையை கொப்பனிகஸ் நிறுவினார்.

அதுபோலவே திருச்சபையின் மையம் திருநிலையினர் என்ற நம்பிக்கை தவறானது, அதன் மையம் பொதுநிலையினரே. திருநிலையினர் பொதுநிலையினரைச் சுற்றி வரும் பணியாளராகவே கருதப்பட வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தை சங்கம் முன்வைத்தது.

இத்தகைய சங்கத்தின் நிலைப்பாடு காரணமாகவே இன்று பங்கேற்கும் திருச்சபை (Participatory church) என்ற எண்ணக்கரு மேலெழுந்து வருகிறது. திருசசபையின் வாழ்விலும் பணியிலும் பொதுநிலையினர், திருநிலையினர், துறவுநிலையினர் ஆகியோர் தத்தமது அழைப்புக்கேற்ப பங்கேற்புச் செய்ய வேண்டும். அனைத்து நிலையினரும் இணைந்தே திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட திருத்தூதுப்பணியை முன்னெடுக்க வேண்டும். அனைத்து திருநிலையினருமே இறையாட்சிப் பணியில் கூட்டுப் பொறுப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஆயர் வ.தியோகுப்பிள்ளை அறக்கொடை பேருரை

எமது மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் அறக்கொடை பேருரை ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் முன்னாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்கள் இருவரினதும் மறைக்கல்விப் பணி எனும் தலைப்பில் அருட்பணி. கு.யே. அன்ரனிபாலா அடிகளாரால் பேருரை சிறப்பாக நிகழ்த்தப்பட்டது.



யாழ் மாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்பணி. எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையிலும் ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி. S.J.Q. ஜெயரஞ்சன் அடிகளாரின் ஏற்பாட்டிலும் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். இந்நிகழ்வில் பல குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

எமது நான்கு தமிழ் மறைவமாவட்டங்களிலும் 2012இல் எல்லோருக்கும் மறைக்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக மறைந்த முன்னாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்களான பேரருட்திரு. ஜேக்கப்பிள்ளை ஜெயோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி, பேரருட்திரு. வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை இருவரதும் மறைக்கல்விப் பணி பற்றி சிந்தித்தமை சிறப்பான ஒரு விடயமாகும். மேற்படி நடைபெற்ற அறக்கொடை பேருரையானது யாழ் மாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது நினைவுப் பேருரை என்பது குறிப்பிடத்தக்கது.

## குருக்களுக்கான வருடாந்த ஞான ஒடுக்கம்

மறைமாவட்ட குருக்களிற்கான வருடாந்த ஞான ஒடுக்கமானது இம்மாதம் இரு குழுக்களாக பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது. முதல் குழுவினருக்கான தியானம் நவம்பர் 04ம் திகதி முதல் 10ம் திகதி வரையும், இரண்டாம் குழுவினருக்கான தியானம் நவம்பர் 18ம் திகதி முதல் 24ம் திகதி வரையும் நடைபெறும். இத்தியானங்களை இயேசு சபைக்குருக்களான அருட்பணி. லசந்த, அருட்பணி. சேவியர் ஞானசேகம் ஆகியோர் நெறிப்படுத்தவுள்ளனர். இத்தியானத்தில் ஆயர், குருக்கள் இணைந்து தமது ஆன்மீக வாழ்வை புதுப் பித்துக்கொள்கின்றனர். இக்காலத்தில் இறைமக் களை விசேடமாக குருக்களுக்காக தங்கள் செபத் தில் மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

## பிறப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் ஞாயிறு

கருக்கலைப்புக்கு எதிரான தங்கள் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இம்மாதம் 11ம் திகதியை பிறப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் ஞாயிறு என இலங்கை ஆயர் பேரவையினர் அறிவித்துள்ளனர். கருக்கலைப்பு என்பது எத்தகையச் சூழலிலும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது மட்டுமல்ல, இத்தகைய பாவச்செயலில் ஈடுபடுவோர் திரு அவையிலிருந்து நீக்கி வைக்கப்படும் ஆபத்தையும் எதிர்கொள்கின்றனர் என மேலும் கூறியுள்ளனர் ஆயர்கள்.

**கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கான ஆக்கங்களை உடன் எமக்கு அனுப்பி வையுங்கள் - ஆசிரியர்**

# கிறிஸ்துவில் வளர நூல் வெளிவருகிறது

"Catechism of the Catholic Church என்னும் ஆங்கில நூலிலிருந்து சமகால தேவை கருதி மிக முக்கிய பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகளால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு கிறிஸ்துவில் வளர என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் இறையுறவிலும், மறையறிவிலும் வளர




பேருதவி புரிவதுடன், கிறிஸ்துவையும் கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் அறியாதோரும் படித்தறிந்து பயன் பெறக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இறைவனின் இருப்பியல் - மூவொரு இறைவன் - விசுவாசம் - பத்துக் கட்டளைகள் போன்றவற்றின் ஊடாக இயேசுவை வெளிக்கொணர்ந்து கிறிஸ்தவம் தொடர்பான மறை உண்மைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்நூல் மறைக் கல்வியில் ஈடுபடும் ஆசிரியர், மாணவர் அனைவருக்கும் பெரிதும் துணை நிற்கும்.

## கலாச்சார சீர்கேடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மீகத்தையும் பின்தங்கிய நிலைக்கு கொண்டு வந்துள்ளது என்பதை யாம் அறிவோம்.

உயிரிழப்பு, பொருளாதார நெருக்கடிகள், காணி சுவீகரிப்புக்கள், ஒழுங்கற்ற மீள் குடியேற்றம் என பல துன்பங்களை நாம் தொடர்ந்து அனுபவிக்கும் வேளையில், போரின் பின்பான அமைதி வடிவில் பல நவநாகரீக மாற்றங்கள், கலாச்சார சீரழிவுகள், தொழில் நுட்ப வசதிகள், உல்லாச போக்கான வாழ்க்கை முறை என்பன எம் மக்களை சூழ்ந்து அவர்களின் விசுவாச வாழ்விற்கு சவாலாக உள்ளதையும் அனைவரும் அறிவோம்.

கலாச்சார சீர்கேடுகளால் எம் மக்களிடையே இறைவன் தந்த கட்டளைகள் மீறப்படுகின்றன. இறை அச்ச உணர்வு இன்றி எங்கும் இன்று பாவம் பெருகி வருகின்றது. தொழில் நுட்ப வசதிகளால் (கணணி, தொலைக்காட்சி, கைத்தொலைபேசி) எம் இளம் சமுகம் மட்டுமல்ல பெரியவர்களும், சிறுவர்களும் கூட உலக போக்கில் கவரப்பட்டு ஆன்மீகத்தை தொலைத்து அனைவர் மத்தியிலும் இறைவனைத்தேடும் ஆர்வம் படிப்படியாக குறைந்து வருவதை எங்கும் காணக்கூடியதாக உள்ளது.

இறைமக்களின் வாழ்வில் இறைவனைப்பற்றிய சிந்தனைகள், அயலவரைப் பற்றிய அக்கறை, அன்பு வாழ்வு, பகிர்வு என்பன மறைந்து பாவமும், பழிவாங்குதல்களும் குறிப்பாக இளையோர் மட்டில் ஒழுக்க சீர்கேடுகளும், பண்பற்ற நடத்தைகளும், வாழ்வை எப்படியும் வாழலாம் என்ற அலட்சிய போக்கும், வாழ்வுக்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணங்களும் எம்மிடையே பெருகி வருகின்றன. எனவே அருளின் ஆண்டாகிய இந்த விசவாச ஆண்டில் நாம் அனைவரும் எல்லாம் வல்லவரான இறைவனை நாடித்தேடி வரும் மக்களாக, இறைபக்தியிலும், எம் ஆன்மீகத்திலும் அக்கறை உள்ளவர்களாக குறிப்பாக மத் 16:26ம் வசனத்தில் கூறப்படுவது போல ''மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன'' என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு எப்போதும் பதில் கூறக்கூடியவர்களாக எம் ஆன்மீகத்தில் அக்கறை கொண்டு வாழ இவ்விசுவாச ஆண்டில் உங்களை அழைத்து நிற்கின்றோம்.

# சிறப்பாக நடந்தேறிய ஆசிய அன்பிய மாநாடு

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தமது நாடுகளில் ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையைப் பின்பற்றி அன்பியங்கள் வழி திருச்சபை புதுப்பித்தலை மேற்கொள்ளும் அன்பிய ஆர்வலர்களுக்கான மாநாடு இம்முறை எமது நாட்டில் கடந்த 18-24 வரை நைனாமடுவில் நடைபெற்றது. 16 நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த 152 வரையான பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர். இதில் 11 ஆயர்களும், எழுபது வரையான குருக்களும், சில துறவிகளும் பல பொதுநிலையினரும் அடங்குவர்.

தத்தமது நாடுகளில் அன்பியங்கள் இயங்கும் முறைகளையும் அதன் மூலம் அவர்கள் அடையும் நன்மைகளையும் இவர்கள் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டனர். மேலும் அன்பியங்கள் பணிசெய்யும் குழுமங்களாக மாற்றப்பட வேண்டும் என்ற உணர்வும் இச்சந்திப்புக்களில் மேலெழுந்தது. அந்த வகையில் இயேசுவைப் பின்பற்றி திருப்பணிபுரியும் அன்பியங்களாக அவை மாற்றப்பட வேண்டும் என்ற கருத்து வலுவாக உணரப்பட்டது. உள்ளீட்டு உரைகளை வழங்கிய இந்திய நாட்டு ஆயர் தோமஸ் டப்றே அவர்களும், தென் ஆபிரிக்க ஆயர் பிறிற்ஸ் லொபிங்கர் அவர்களும் இக்கருத்தை ஆழமாக வலியுறுத்தி தெளிவுபடுத்தினர்.

சிலாபம், குருநாகல், கொழும்பு ஆகிய மறைமாவட்டங்களில் இயங்கிவந்த பல்வேறு அன்பியங்களைத் தரிசித்து இலங்கையில் அன்பியங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை சுவைத்தறியும் சந்தர்ப்பமும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. கலந்து கொண்ட பல நாட்டுப் பிரதிநிதிகளும் தாம் தரிசித்த அன்பியங்களை வெகுவாகப் பாராட்டி விதத்துரைத்தனர். இவ்வனுபவம் தொடர்ந்தும் அன்பியப் பணியில் ஈடுபட ஒரு உந்து சக்தியாக அமைகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். அன்பியங்கள் வழி திருச்சபையைப் புதுப்பிப்பதற்கான வழிவகைகளும் கலந்துரையாடப்பட்டு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இறுதி நாளாகிய 24ம் திகதி இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்து ராகம இலங்கை மாதா பேராலயத்தில் திரண்ட 2000 வரையான அன்பியப் பணியாளர்களின் பேரணியோடு இம்மாநாடு நிறைவுக்கு வந்தது. இப்பேரணியில் எமது மறைமாவட்டத்திலிருந்தும் ஐம்பதிற்கும் அதிகமான அன்பிய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒருவாரம் நடைபெற்ற இம்மாநாட்டில் எமது மறைமாவட்டத்தின் பிரதிநிதிகளான பொதுநிலையினராகிய திருவாளர்கள் சந்தியாப்பிள்ளை, பிரான்சிஸ் பெர்னான்டோ ஆகியோரும் அருட்பணியாளர்களாகிய யேசுரட்ணம், இரவிச்சந்திரன், அகஸ்ரின் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். எதிர்வரும் காலங்களில் எமது மறைமாவட்டத்திலும் அன்பியப் பணியை முழுவீச்சாக முன்னெடுக்க இவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

மாநாட்டின் தொனிப்பொருளின் அடிப்படையிலான இறுதி அறிக்கை ஒன்றும் மாநாட்டின் நிறைவாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வாழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றடைந்தனர். பேரணியின் நிறைவில் யாழ் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் ஆயர் மறையுரையில், உலகில் மக்களை அழிப்பதற்கும் நாடுகளை சீர்குலைப்பதற்கும் காலத்திற்குக் காலம் புதிய புதிய ஆயுதங்களைக் கண்டு பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அன்னை மரியாள் எங்கள் அனைவருக்கும் மாபெரும் சக்தி வாய்ந்த ஆயுதத்தை தந்திருக்கிறார். அது தான் செபமாலை. தினமும் செபமாலை செபித்து அன்னையைப் போல அவர் பிள்ளைகள் நாங்கள் இறைசித்தத்திற்கு எம்மைக் கையளித்து வாழ வேண்டும் என அழைப்பு விடுத்ததோடு, யாழ் மறைமாவட்டத்தில் இறை நம்பிக்கை ஆண்டினையும் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து, இந்த ஆண்டில் இறைமக்கள் செய்ய வேண்டியவை பற்றியும் விளக்கினார்.

திருப்பலியின் நிறைவில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி அதிவணக்கத்திற்குரிய பேராயர் ஜோசப்ஸ்பிரேரி அவர்கள் அன்னை மரியாளுடைய திருச்சொருப ஆசீர் வழங்கினார்.

அன்னை மரியாள் எப்பொழுதும் தனது மகனிடம் எங்களுக்காக பரிந்து பேசுகின்றார் என்பது இப்பேரணியிலும் நிரூபிக்கப்பட்டது. பேரணியின் தொடக்கத்திலும், முடிவிலும் அடைமழை பொழிந்தது ஆனால் பேரணியின் போது இதமான கால நிலை நிலவியது. இம்மாபெரும் தேசிய செபமாலைப் பேரணியை யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை இயக்குநர் தந்தை அருட்பணி. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் முன்னின்று ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.